Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 28 (29.06.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 270

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

(சி-976)

# சோஷின் கப்பலிலிருந்த போராளிகளின் நிலை; தெரியாது என கண்காணிப்புக்குழு கைவிரிப்பு!

## கடல்மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் விரைவில் வேண்டுமென வலியுறுத்து

கடலில் ஏற்படும் மோதல்களைத் தவிர்த்துக்கொள்வது பற்றி, கண்காணிப்புக்குழு ஏற்கனவே கூறிய ஆலோசனையின் பிரகாரம் - அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒப்பந்தமொன்றை இயலுமான விரைவில் செய்து கொள்ளவேண்டும் என, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் எண்ணெய்த் தாங்கிக் கப்பல், சர்வதேசக் கடற்பரப்பில் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது பற்றிய விசாரணை அறிக்கையிலேயே, கண்காணிப்புக்குழு இந்தப் பிரேரணையை முன்வைத்துள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக, கண்காணிப்புக்குழு கண்டறிந்துள்ளதாகப் பெறப்படும் முடிவுகள் பின்வருமாறு -

✦ குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக இருதரப்பும் உரிய வேளையில் அறியத்தரவில்லை. இதன் தொடர்ச்சியாக, இச்சம்பவத்தைக் கண்காணிப்பதற்கோ, கப்பல் மூழ்கடிக்கப்படுவதைத் தடுப்பதற்கோ கண்காணிப்புக் குழுவினால் முடியாதநிலை ஏற்பட்டது.

✦ விடுதலைப் புலிகளின் எண்ணெய்த்தாங்கிக் கப்பலில் இருந்த மாலுமிகளுக்கு என்ன நடந்தது என்பது பற்றி, (10 ஆம் பக்கம் பார்க்க)

## அகாஷி விஜயம் அடுத்த மாதத்தில்!

ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசுஷி அகாஷி, வரும் மாதம் முதல் வாரத்தில், இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

சமாதான முயற்சிகளைத் தொடர்வது குறித்து ஆராயவே, இவர் இலங்கைக்கு வரவிருக்கின்றார்.

இவரது விஜயத்தின் ஒரு கட்டமாகவே, ஜப்பானியத் தூதுவர் ஒட்சுகா நாளை வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஜப்பானியத் தூதரகம் தெரிவித்தது.

தற்போது லண்டனில் தங்கியுள்ள யசுஷி அகாஷி, புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்க முயற்சித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

### விண்ணாணம் விநாசியர்



அப்ப, இனிப் பழையபடி, தமிழனென்டால் கொழும்பில விசேட கவனிப்புத்தான்!

# கொழும்பில் பாரிய சுற்றிவளைப்பு; 650 தமிழர்கள் கைதாகி விசாரணை!

## 39 பேர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டனர்

(கொழும்பு)

**கொழும்பில் இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து நடாத்திய பாரிய தேடுதல் நடவடிக்கையின்போது, சுமார் அறுநூற்றி ஐம்பது தமிழர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களில் 39 பேர் தொடர்ந்தும் விசாரணைகளுக்காகத் தடுத்துவைக்கப்பட, ஏனையோர் நேற்று நண்பகல் அளவில் விடுவிக்கப்பட்டனர்.**

நேற்று நள்ளிரவு முதல் அதிகாலை வரை நடைபெற்ற இத்தேடுதல் நடவடிக்கைகளின்போது, கைது செய்யப்பட்டவர்களில் அநேகர் இளவயதினராவர்.

தெஹிவளை, கல்கிசை, மொறட்டுவ, இரத்மலானை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் - இராணுவத்தினருடன் இணைந்து பொலிஸாரும் மேற்படி தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன்போது - சந்தேகத்துக்கிடமான வீடுகள், வாகனங்கள் என்பவற்றை, படையினர் துருவித்துருவி தேடுதல் நடத்தினர்.

இத்தேடுதலின்போது, படையினரால் கைதுசெய்யப்பட்ட அனைவரும், கல்கிசை மற்றும் மொறட்டுவ பொலிஸ் நிலையங்களுக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

# தாப்ரூவைச் சுட்டுவிட்டு மதன் ஓட பொலிஸார் விடியோ எடுத்தனர்!

## 'தமிழ் அலை' வெளியிடும் தகவல்

கொழும்பில், பொலிஸ் புலனாய்வுப்பிரிவு இன்ஸ்பெக்ரர் சுனில் தாப்ரூ சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் கைதான மதன்குமார், காட்டிக்கொடுத்தலுடன் சம்பந்தப்பட்ட பணக்கொடுக்கல் வாங்கல்களால் ஏற்பட்ட பிரச்சினையிலேயே சுனில் தாப்ரூவைச் சுட்டதாக, கிழக்கிலிருந்து வெளியாகும் 'தமிழ் அலை' வாரஇதழ் தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக 'தமிழ் அலை' மேலும் தெரிவித்திருப்பதாவது, சுனில் தாப்ரூவைச் சுட்டுக்கொன்ற மதன்குமார், (10 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் விசேட ரோந்துப் பணிக்காக 25 ஜீப்கள், 40 மோட்டார் சைக்கிள்கள்!

## படையினர், பொலிஸாருக்கு வழங்கப்பட்டன

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்புக்காக - 25 ஜீப் வண்டிகளும், 40 மோட்டார் சைக்கிள்களும் மேலதிகமாகப் படையினர் மற்றும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

அதேவேளை - சந்தேகத்துக்கிடமான நபர் தொடர்பான தகவல்களைப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கோ, அல்லது உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கோ - ரோந்தில் ஈடுபட்டுள்ள படையினரும், பொலிஸாரும் நேரடியாகத் தெரிவிப்பதற்கும் வசதி செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அத்துடன் - முக்கிய படை உயரதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகியோரின் பாதுகாப்பும், கொழும்பில் அதிகரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க உதவித் திட்டங்கள் யாழில் பிற்போடப்பட்டுள்ளன!

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க அரசின் நிதியுதவியுடன், யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவிருந்த சிறுசெயற்திட்டங்கள் அனைத்தையும் சிறிது காலம் பிற்போடுவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 'யு.எஸ்.எய்ட்' நிறுவனத்தினூடாக, பல சிறு செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு, ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து - மேற்படி செயற்திட்டங்களை இனங்காணுதல், செயற்திட்டங்களைத் தயாரித்தல் போன்ற ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்கா செல்லும் கப்பல்களை கொழும்பில் சோதனையிட ஏற்பாடு!

(கொழும்பு)

அமெரிக்காவுக்கு கொள்கலன்களை ஏற்றிச்செல்லும் கப்பல்களை, கொழும்புத் துறைமுகத்தில் வைத்தே அமெரிக்கச் சுங்க அதிகாரிகள் சோதனையிட வழிசெய்யும் உடன்படிக்கையில், இரு நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன.

அமெரிக்காவுடன் இத்தகைய உடன்படிக்கையைச் செய்துகொண்ட பதினைந்தாவது நாடாக இலங்கையும் இணைந்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், அமெரிக்கச் சுங்க அதிகாரிகள் - அமெரிக்காவுக்குச் செல்லும் கப்பல்களைக் கொழும்பில் வைத்தே சோதனையிட்டு - பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வார்கள். 2002 செப்ரெம்பர் 11 ஆம் திகதி தாக்குதலுக்குப் பின்னரே, அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்காவின் சுங்க எல்லைப் பாதுகாப்புப் பிரிவு ஆணையாளர் பிரௌணிங், இலங்கை அரசு தமக்கு அளித்துவரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# போர் நிறுத்த உடன்பாட்டில் சிறுவர் நலன் விடயங்கள்!

## கண்காணிப்புக்குழுவிடம் யுனிசெப் கோரிக்கை

சிறுவர் உரிமைகள் பற்றிய விடயங்களையும், சிறுவர்களின் நலன்களைப் பேணுகின்ற விடயங்களையும் - அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கையில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று, யுனிசெப் நிறுவனம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக, யுனிசெப் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் - இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரை நேரில் சந்தித்துப் பேசியுள்ளனர். இவ்விடயத்தில் தமக்கு உதவுமாறும் யுனிசெப் அதிகாரிகள் அவரிடம் கோரியுள்ளனர்.

சிறுவர்களை சித்திரவதைக்குட்படுத்தல், (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation எக்ஸ்போ

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999

071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290

(சி -975)

# திரிபுபடுத்தப்பட்டுள்ள வரலாற்று நூலை பாடசாலைகளுக்கு விநியோகிக்க முயற்சி!

## சிஹல உறுமய குற்றஞ்சாட்டுகிறது

மலேசியாவில் பதிப்பிக்கப்பட்ட 'யாழ்ப்பாண வரலாறு' என்ற திரிபுபடுத்தப்பட்ட 127 பக்கங்கள் கொண்ட நூலை, வடக்கு- கிழக்கிலுள்ள பாடசாலைகளுக்கு விநியோகிக்க புலிகள் முயற்சிசெய்வதாக, சிஹல உறுமயவின் பேச்சாளர் உதய சுமன்வில தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறும்போது -

கலாநிதி குணராசாவினால் எழுதப்பட்ட இந்த நூலில் - இலங்கை, முற்றுமுழுதாகத் தமிழரின் கலாசாரத்தால் உருவானதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதுடன், இதற்கு ஆதாரமாக வர்ணப் புகைப்படங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் தமிழ் நாகரிகம், விஜயனின் வருகையுடன் ஆரம்பிப்பதாகவும், புத்தர் இலங்கைக்கு வந்து - சகோதரர்களான தவோதரன், மகோதரன் ஆகியோருக்கிடையிலான பிரச்சினையைத் தீர்க்க முயற்சி செய்ததாகவும் இந்த நூலில் கூறப்பட்டுள்ளது.

இது, வரலாற்றைத் திரிபுபடுத்தும் ஒரு முயற்சியாகும். இந்த நூலை வடக்கு- கிழக்குப் பாடசாலை நூலகங்களுக்கு விநியோகிக்க கல்வி அமைச்சின் அனுமதியைப் புலிகள் கோரியிருக்கின்றனர் என்றார்.

இக்குற்றச்சாட்டு குறித்து கருத்து வெளியிட்டுள்ள கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு,

இப்படியானதொரு புத்தகம் தனகுக் கிடைக்கவில்லை என்றும், அந்தப் புத்தகத்தை படித்தாலேயே பாடசாலை நூலகங்களுக்கு விநியோகிப்பது குறித்து முடிவுசெய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார்.


உடுவில் மகளிர் கல்லூரி
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவு
UDUVIL GIRLS COLLEGE
EXTERNAL DEGREE UNIT

யாழ் - பேராதனை

G.A.Q., B.A. Part - I, B.A. Final, 1st in Com., B.Com. Part - I, B.Com. Part - II, B.Com. Final

விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அலுவலகத்தில் பெறலாம். விரிவுரைகள் ஆரம்பம்: 07.07.2003 பிற்பகல் 3.30 மணி. வகுப்புகள் யாவும் வார நாட்களில் மாலை நேரத்தில் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு: இணைப்பாளர்,
பட்டப்படிப்புகள் பிரிவு,
உடுவில் மகளிர் கல்லூரி.
T.P.No. - 021 - 222 - 3300
(சி-1125)



பனிக்கட்டித் தொழிற்சாலை வெற்றிடங்கள்

யாழ். குருநகரில் அமைந்துள்ள எமது பனிக்கட்டித் தொழிற்சாலையில் பின்வரும் வெற்றிடங்களுக்குத் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குளிர்சாதன தொழில்நுட்பவியலாளர்கள்
Refrigeration Technicians

மேற்கூறப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு குளிர்சாதன தொழில்நுட்பத் துறையில், தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று சித்திபெற்றவர்களும், இத்துறையில் சில வருடங்கள் தொழில்புரிந்த அனுபவம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். அமோனியா வாயுவில் இயங்கும் சாதனங்களில் அனுபவமுள்ளவர்களுக்கும் கடின உழைப்பாளிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

பொறியியல் தொழில்நுட்பப் பயிலுநர்கள்
Trainee Technicians

குளிர்சாதன தொழில்நுட்பத் துறையில் தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று சித்திபெற்றவர்கள் மேற்குறிப்பிட்ட வெற்றிடத்துக்கு விண்ணப்பிக்கலாம். தகுதி அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

எலக்றிசியன் - Electrician

N.C.T Electrical Engineering இல் தேர்ச்சிபெற்று, தொழில் நிறுவனங்களில் குறைந்தது 5 வருடம் வேலைசெய்த அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

நற்சாட்சி விபரம் கோரக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர் விலாசத்துடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி :- 03.07.2003

தொடர்பு :

இயக்குநர்,
புறோமோட்டேர்ஸ் என்ஜினியறிங் கம்பனி லிமிட்டெட்,
844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி-1129)



மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை!

யாழ். நகரில் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றம், தலைநகரில் தனித்துவமான புத்தக நிலையமாகத் திகழும் ஜெயா புத்தக நிலையத்தின் (Jeya Book Centre) ஆதரவுடன் நடாத்தும் மாபெரும் புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும்.

காலம் : 2003 ஜூலை 15 முதல் 30 வரை.
நேரம் : தினமும் காலை 9.00 முதல் மாலை 6.00 மணிவரை (புதிய நேரம்).
இடம : யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூல்நிலைய மண்டபம்.

- பாலர் முதல் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாட, பயிற்சிப் புத்தகங்கள்.
- பல்கலைக்கழக மாணவர்களுக்கான மருத்துவ, விஞ்ஞான, கணித, பொறியியல், கலை, விஞ்ஞான, வணிக நூல்கள்.
- கணினிக் கல்வி தொடர்பான நவீன நூல்கள்.
- சிறுவர் இலக்கியங்கள்.
- நாவல்கள், சிறுகதைகள், கவிதைத் தொகுதிகள்.
- அகராதிகள் (தமிழ், ஆங்கில மொழிகளில்).
- ஜோதிட நூல்கள்.
- சமையற்கலை நூல்கள்.
- ஆங்கில இலக்கிய நூல்கள்.
- தரமான அப்பியாசக் கொப்பிகள் (மலிவு விலையில்).
- தரமான C.R. புத்தகங்கள் (மலிவு விலையில்).

விரும்பிய யாவற்றையும் ஒரே இடத்தில், ஒரே நாளில் பெறக்கூடிய அரிய வாய்ப்பு! சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!!

நூல்களுக்கான விசேட கழிவுடன் கூடிய, விலை விபரம்:

| | |
|---|---|
| இலங்கை நூல்களுக்கு - | ஆகக்கூடிய சில்லறை விலையில் 10 % கழிவு |
| இந்திய வெளியீடுகளுக்கு - | 1 இந்திய ரூபாய் 2.75 வீதப்படி |
| இங்கிலாந்து வெளியீடுகளுக்கு - | 1UK £ - 165/= வீதப்படி |
| அமெரிக்க வெளியீடுகளுக்கு - | 1US $ - 110/= வீதப்படி |
| சிங்கப்பூர் வெளியீடுகளுக்கு - | 1S $ - 75/= வீதப்படி |

முக்கிய குறிப்பு:
பாடசாலைகள், பல்கலைக்கழகம், பொது நிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், சனசமூக நிலையங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்பன புத்தகங்களைக் கொள்வனவு செய்யுமிடத்து குறித்த விலையில், 10 % கழிவு கொடுக்கப்படும். புத்தக விற்பனையாளர்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யுமிடத்து விசேட கழிவு வழங்கப்படும்.

நிறுவனங்களுக்கூடான புதிய ஓடர்களும் ஏற்கப்பட்டு விநியோகம் செய்யப்படும்.
யாழ்.எழுத்தாளர்கள் தங்களது படைப்புக்களை கண்காட்சியில் வைக்க விரும்பினால் 13,14 ஆம் திகதிகளில் கண்காட்சி மண்டபத்திற்கு நேரடியாக வருகை தரவும்.

வாருங்கள்! அலைகடலெனத் திகழும் புத்தக வகைகளைப் பாருங்கள்!
விரும்பியதை வாங்குங்கள்! அரியவாய்ப்பைத் தவறவிடாதீர்கள்!
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(சி-1127)

வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்
JEYA BOOK CENTRE, 91-99, People's Park Complex, Colombo - 11

மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை!



## சிறுவிளம்பரம்

### தேவை

கணினியில் சகலவிதமான பிறிண்டிங் வேலைகளிலும் அனுபவம்வாய்ந்த பெண்பிள்ளை தேவை.

விண்ணப்பதாரிகள் 06.07.2003 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல.14, மே/பா. நமது ஈழநாடு.

(சி-1132)

### விற்பனைக்கு

22 x Optical Zoom கொண்ட - Panasonic Video Camera (Tourist Camera) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு - S.பிரதீப், 23, ஈச்சமோட்டை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

(400)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் பணிபுரியும் விசாக நட்சத்திர 1972 இல் பிறந்த லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு அழகிய 5 அடி உயரமுள்ள மணமகள் தேவை.

சாதகக் குறிப்பு, புகைப்படம் மற்றும் விபரங்களுடன் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்க.

கிருஷ்ணமூர்த்தி, யாழ்ப்பாணம், தொ.பே. இல.2789.

(393)

அன்பளிப்பு

மூன்று மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி மில்க்வைற் செய்தியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப் தொழிலகம்
த.பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.
(சி-972)

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த

கே.எஸ்.ரவிக்குமாரின்

பாறை



10.30, 2.30, 6.30, 9.30
(சி-973)

நிறஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார் (இரு வேடம்), தேவயானி நடிப்பில்

சூரிய வம்சம்

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)
RED DRAGON
(சி-974)

# புலிகள் பேச்சுக்களில் கலந்துகொள்ள எடுத்துள்ள முடிவு மகிழ்ச்சிக்குரியது!

## நோர்வே, ஜப்பானிய தூதுவர்கள் தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் மீண்டும் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வதாக எடுத்துள்ள முடிவு குறித்து, நோர்வே மற்றும் ஜப்பானியத் தூதுவர்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் இது குறித்துக் கருத்து வெளியிட்டபோது,

புலிகள் தொடர்ந்தும் பேச்சுக்களில் கலந்துகொள்வதாக எடுத்துள்ள முடிவு மகிழ்ச்சிக்குரியது. வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகத்தை விரைவில் அமைக்கவுள்ளதாக, அரசாங்கம் உறுதியளித்திருக்கிறது எனக் குறிப்பிட்டார்.

ஜப்பானியத் தூதுவர் ஒட்சுகாவும் இதே கருத்தையே முன்வைத்திருப்பதுடன், அரசாங்கத்துக்கும் - புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் தொடரவேண்டும் என்றும், இந்தப் பணியை நோர்வே அரசாங்கம் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதாகவும் குறிப்பிப்பிட்டுள்ளார்.

# ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் பொ.ஐ.முவில் இணையத் திட்டம்!

ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எட்வேட் குணசேகர, பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைவதற்கு முயற்சி செய்வதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்துகொள்வதற்கு முன்னோடியாக, நாடளுமன்ற உறுப்பினர் எட்வேட் குணசேகர - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி அமைதி முயற்சி தொடர்பாகக் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை எதிர்த்தே, இவர் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, தான் பொ.ஐ.முவில் இணையவுள்ளதாக வெளியான செய்திகளை எட்வேட் குணசேகர மறுத்துள்ளார்.

# புலனாய்வுப் பிரிவினரின் படுகொலைகளால் நாட்டின் பாதுகாப்புச் சீர்குலையவில்லை!

## பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன



இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றபோதிலும், அது நாட்டின் பாதுகாப்பை எந்தவகையிலும் பாதிக்கவில்லை என, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் இவ்வாறான படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக, பிரதமர் விசேட கவனம் செலுத்திவருகிறார். புலனாய்வுப் பிரிவினரின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு, விசேட நடவடிக்கைகள் பிரதமரின் ஆலோசனையின் பெயரில் மேற்கொள்ளப்படுகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலேயே அதிகளவு புலனாய்வுப் பிரிவினர் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களில் பலர் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வந்தவர்கள். மேலும், வடக்கு - கிழக்கிலுள்ள புலனாய்வுப் பிரிவில் அங்கம்வகிக்கும் உறுப்பினர்களில் பலர் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்துகொண்டே தகவல்களை வழங்கி வருகின்றனர். அவர்களது பாதுகாப்பினை உறுதிசெய்வதில் சிக்கல்கள் தோன்றியிருப்பதாக அவர் கூறினார்.

எவ்வாறாயினும், விடுதலைப் புலிகள் இந்தச சம்பவங்களுடன் தொடர்புபட்டிருந்தால், அதனை நிறுத்துமாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு மூலம் புலிகளிடம் கேட்டிருக்கிறோம். இந்தக் கொலைச் சம்பவங்களுக்கும், தமக்கும் தொடர்பு இல்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர். உட்பூசல் காரணமாகவே இந்தப்பிரச்சினை தோன்றியிருப்பதாகவும், விடுதலைப் புலிகள் கூறியுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், தேசிய பாதுகாப்பை அதிகரிக்கும் முகமாக, முப்படைகளைப் புனரமைப்புச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மேலும் தெரிவித்தார்.

# புளியந்தீவு அரசியல் பொறுப்பாளரின் பிணைமனு வெள்ளியன்று விசாரணை!

பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் மட்டக்களப்பு - புளியந்தீவு கோட்ட அரசியற்பொறுப்பாளர் சத்தியராஜ்யை விடுவிக்குமாறுகோரி, கிழக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட பிணை மனு மீதான விசாரணை, அடுத்தமாதம் நான்காம் திகதி இடம்பெறும் .

பிணை மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, கிழக்கு மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி பரமராஜா இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.





மட்டக்களப்பில் தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் ஓவியக் கண்காட்சியை கிழக்கு மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.பரமராஜா திறந்து வைப்பதையும், ஓவியக் கண்காட்சியைப் பார்வையிடும் பொதுமக்களையும் படங்களில் காணலாம்.

# ஆயுதங்களைக் கைவிட்டபின்னரே புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம்!

## பொ.ஐ.முவின் நிலைப்பாட்டைக் கூறுகிறார் மங்கள சமரவீர



(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் இறுதித் தீர்வை நோக்கியதாகவே அமைக்கப்பட வேண்டும் என்பதில்- பொதுஜன ஐக்கிய முன்னணியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் உறுதியோடு இருப்பதாக பொ.ஐ.மு. நடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அது குறித்து, அவர் மேலும் கருத்துத் தெரிவித்ததாவது -

இறுதித் தீர்வு குறித்துத் தீர்மானமோ, ஒப்பந்தமோ செய்துகொள்ளப்படாமல், இடைக்கால நிர்வாகத்தை அமைத்துக்கொடுப்பது, உத்தியோகப்பற்றற்ற ஈழத்தை வழங்குவதாகவே அமையும்.

விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தைக் கையளிக்க வேண்டுமானால், அவர்கள் முதலில் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும். அத்துடன் வரி அறவிடுவதையும், பொலிஸ் நிர்வாகத்தையும், நீதி நிர்வாகத்தையும் நடத்துவதை நிறுத்தவேண்டும்.

இதுவே பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிலைப்பாடாகவுள்ளது.

இடைக்கால நிர்வாகத்தில் ஜனநாயகவழிக்கு வந்திருக்கும் தமிழ்க்குழுக்களான - ஈ.பி.டி.பி, புளொட், ஈரோஸ் போன்றவற்றின் பிரதிநிதித்துவமும், கிழக்கிலுள்ள சிங்கள - முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவமும் பேணப்படவேண்டும்.

நாட்டின் அரசியலமைப்புக்கும், இறைமைக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே, இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படவேண்டும்.

2000 ஆம் ஆண்டு பொ.ஐ.முவினால் முன்வைக்கப்பட்ட தீர்வுயோசனைகளின் அடிப்படையில்தான் இடைக்கால நிர்வாகத்தை அமைக்கப்போவதாக, ஊடகங்கள் மூலமான மாயையை ஐக்கிய தேசியக்கட்சி உருவாக்கி வருகிறது.

இதற்கு எதிராக மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை, நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளவிருக்கின்றோம். எந்த இறுதித் தீர்வோ, தீர்மானமோ எட்டப்படாமல் - இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத்தெரிவித்தே, ஜே.வி.பியுடன் இணைந்து இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இடைக்கால நிர்வாகத்தை அமைப்பது தொடர்பாக- பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் ஆலோசனை செய்திருக்கவேண்டும். ஆனால், அவர் இதுவரையில் இவ்வாறு செய்யவில்லை.

அரசியலமைப்புக்கு முரணாக அரசு இடைக்கால நிர்வாகத்தை அமைக்க முயன்றால், ஜே.வி.பியுடன் இணைந்து பெரும் போராட்டங்களில் பொ.ஐ.முன்னணி ஈடுபடும் என்றும், மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

# இடம்பெயர்ந்துள்ள சிற்றூழியர்கள் சொந்த இடங்களுக்குச் செல்லலாம்!

## அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவிப்பு

வட-கிழக்குப் பகுதிகளில் பணிபுரிந்து, கடந்தகால யுத்தம் காரணமாக, வெளியிடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்று, அங்கு பணிபுரியும் சிற்றூழியர்கள், மீண்டும் முன்னர் பணியாற்றிய இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லமுடியும் என, உள்ளூராட்சி மாகாணசபை அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

வட - கிழக்குப் பகுதிகளில் சிற்றூழியர்களாகப் பணிபுரிந்துவிட்டு, கடந்தகால யுத்தம் மற்றும் இடம்பெயர்வு போன்ற காரணங்களால் வெளி[illegible] பணிபுரியும் சிற்றூழியர்[illegible] மீண்டும் தமது [illegible] பணி[illegible]

# கிண்ணியாவில் ஏற்பட்ட முறுகல்நிலைக்கு எல்லை வரையறுக்கப்படாததே காரணம்!

## கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா காட்டுப் பகுதியில், விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டதற்கு, கட்டுப்பாட்டு எல்லைகள் தெளிவாக வரையறுக்கப்படாததே காரணம் என்று, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிறகடோட்ரயர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சம்பவம் நடைபெற்ற பகுதியை இரண்டு தரப்பினருமே தமது கட்டுப்பாட்டுப்பகுதி என்று கூறுகின்றனர். இதனால், கண்காணிப்புக் குழுவினருக்குப் பெரும் சிரமமாக உள்ளது.

புலிகள் - தமது பகுதியில் இராணுவம் பிரவேசித்ததாகக் கூறுகின்றனர். ஆனால், இராணுவத்தினரோ - மாளரசன் குளத்தில் புதிய முகாம் அமைக்க புலிகள் முயற்சித்ததாகக் கூறியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவுடன் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் ட்ரைகேவ் ரெலவ்சன் பேச்சுக்களை நடத்தினார்.

இச்சந்திப்பின்போது, திருகோணமலைச் சம்பவம் தொடர்பாக, கண்காணிப்புக்குழுவின் அறிக்கையை எதிர்பார்த்திருப்பதாக ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் குறித்து புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், கண்காணிப்புக்குழுவிடம் புகார் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### சயனைட் அருந்திய இளைஞர் மரணம்

தெஹிவளை பாலத்தில், பொலிஸார் வழிமறித்துச் சோதனையிட முற்பட்டபோது - சயனைட் அருந்தி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வில்வராசா என்ற இளைஞர் கடந்த புதன்கிழமை மரணமடைந்தார்.

இவர், கடந்த 10 ஆம் திகதி சயனைட் அருந்தி ஆபத்தான நிலையில், கொழும்பு தெற்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட வில்வராசா, அங்கு மரணமானார்.

# மாவீரர் பெயர்ப்பலகை மாமுனையில் திறப்பு!

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கு - மாமுனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி கற்று, தமிழீழ விடுதலைக்காக வித்தாகிய மாவீரர்களின்- பெயர் விபரப்பலகை திரைநீக்க நிகழ்வு, கடந்த திங்கட்கிழமை மேற்படி பாடசாலையின் அதிபர் செ.சிறிராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில பொதுச்சுடரினை வடமராட்சி - கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் ஐ.சிவஞானம், வடமராட்சி கிழக்கு காவற்பணிமனைப் பதில் பொறுப்பாளர் மதியழகன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தேசியக் கொடியினை வடமராட்சி - கிழக்கு அரசியற்துறை மக்கள் தொடர்பாளர் யாழ்மன்னன் ஏற்றிவைத்தார்.

மாவீரர்களின் பெயர் விபரப்பலகையை, வடமராட்சி வலயக் கல்விக் கழகப் பொறுப்பாளர் கி.தாயகன் திரைநீக்கம் செய்துவைத்தார். மாவீரர்களது திருவுருவப்படங்களுக்கு, அவர்களது பெற்றோர்கள் ஈகைச்சுடரேற்றி, மலர்மாலை அணிவித்தனர்.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு புனரமைப்புக்குழுத் தலைவர் சி.பொன்னம்பலம் உட்படப் பலரும் சிறப்புரையாற்றினர்.

(122)

# பாடசாலைகளில் அரங்கேற்றப்படும் மிதிவெடி விழிப்புணர்வு ஆற்றுகை!

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் மிதிவெடி விழிப்புணர்வுக்கான கல்வியியல் செயற்பாடு, இரண்டாவது ஆண்டாக இவ்வருடமும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மிதிவெடி அபாயத்தை எதிர்நோக்கிக்கொண்டுள்ள பகுதிகளில் வாழும் சிறுவர்கள் அனைவருக்கும் - வெடிபொருட்களின் வடிவங்கள், வகைகள், அவை காணப்படக்கூடிய இடங்கள், ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் என்பவற்றோடு, வெடிபொருட்களிலிருந்து தற்பாதுகாத்துக் கொள்விதற்கு, சாத்தியமான நடைமுறைகள் என்பவற்றைத் தெளிவாகக் கற்றுக் கொள்வதை நோக்காகக் கொண்டு இச்செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

தென்மராட்சி, வடமராட்சி மற்றும் வலிகாமம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில், இந்தச் செயற்பாடு தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த மே மாதம் 1 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'இடர்கள் கெடுக' என்ற தலைப்பிலான இத்திட்டத்தின் மூலம், இவ்வாண்டு இறுதிக்குள் 100 பாடசாலைகளிலுள்ள சுமார் 25 ஆயிரம் மாணவர்கள், இவ்விழிப்புணர்வுக் கல்வியினால் பயன்பெறுவார்கள் என்று நம்பப்படுகிறது.

மாணவர்கள், பாலகர்கள் யாவருக்கும் ஏற்றவகையில் இலகுவாக உணர்ந்துகொள்ளத்தக்கதாக, இந் நாடகத்தின் சொல்முறை அமைந்திருக்கிறது. மகிழ்ந்து கற்றலுக்கான சகல அம்சங்களுடனும், இந்த விழிப்புணர்வுக்கான அறிக்கை தயார் செய்யப்பட்டிருப்பதாக - யாழ்ப்பாணப் பாடசாலைகளின் பெரும்பாலான அதிபர்கள் கருத்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

'இடர்கள் கெடுக' எனப் பெயரிடப்பட்டு, அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்திறன் அரங்க இயக்கம் சார்பாக, தே.தேவானந்த் இந்தக் கற்றல் செயற்பாட்டை நெறிப்படுத்தியுள்ளார்.

இந்தச் செயற்பாட்டின் ஆளுமைச் சிறப்பையும், குடாநாட்டின் தேவையையும் உணர்ந்து - வரும் காலங்களில் - தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளிலும் இந்த ஆற்றுகையை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகத்தின் அனுசரணையுடன், மிதிவெடி விழிப்புணர்வுக்கான செயற்பாடாக 'இடர்கள் கெடுக' ஆற்றுகை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதுவரையில் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளிலுள்ள 35 பாடசாலைகளில் நடத்தப்பட்ட - இவ்வாற்றுகைமூலம், இரண்டாயிரத்து ஐநூறு மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

# ஜி. ரி. இசற்றினால் குடாநாட்டில் 14 பாடசாலைகள் புனரமைப்பு!

போரினால் பாதிக்கப்பட்டுள்ள, வடமாகாணத்தைப் புனரமைக்கும் திட்டத்தின்கீழ் - ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து கல்வி வலயங்களிலுமிருந்து தெரிவுசெய்யப்பட்ட பதினான்கு பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்யவுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால், புனரமைப்பு உதவிகளைப் பெறுவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகள் பற்றிய விபரம் வலய ரீதியாக வருமாறு -

தென்மராட்சி - வரணி மகா வித்தியாலயம், மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.

வடமராட்சி - தம்பசிட்டி மெதடிஸ்ட் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி.

வலிகாமம் - அராலி இந்துக்கல்லூரி, குட்டியப்புலம் அரசினர் தமிழக்கலவன் பாடசாலை, புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை சென். ஜோசெப் வித்தியாலயம், சென். மேரீஸ் வித்தியாலயம், கோண்டாவில் பரஞ்சோதி மகா வித்யாலயம்.

தீவகம் - வேலணை சரஸ்வதி வித்தியாலயம், கரம்பன் சிறிய புஸ்பம் பெண்கள் மகா வித்தியாலயம்.

(101)



ஆனைக்கோட்டை நல்லாயன் அருட்சகோதரிகளினால் வறிய பெண்களுக்காக நடாத்தப்பட்ட 'வாழ்வியல்' பயிற்சி நெறியின் - சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம்- பயிற்சியை நிறைவுசெய்த ஒருவருக்கு, சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஆனைக்கோட்டை நிருபர்)

# யுத்தத்தால் பாதிப்புற்றோரின் உடல், உளப் பிரச்சினைகள் பயிற்சிப்பட்டறையில் ஆராய்வு!

(யாழ்ப்பாணம்)

சித்திரவதைக்கு எதிரான தினத்தை முன்னிட்டு, வட - கிழக்கு யுத்தத்தால் ஏற்பட்ட உடல், உள பிரச்சினைகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை - குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தின் ஏற்பாட்டில், அகவொளி உளவளத்துணை நிலையத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் கடந்தகால யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகள், சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் எதிர்நோக்கும் உடல், உள பிரச்சினைகள் மற்றும் வெடிபொருட்களால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

ரஞ்சித் நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறையில், அருட்திரு இராஜநாயகம், மௌலவி இர்பான், வைத்திய கலாநிதி முல்லை பரந்தாமன், மனித உரிமைகள் சட்டத்தரணி ரெமிடியஸ் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### சமுர்த்தி வங்கி ஊழியர்களுக்கு 9 நாட் கள் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பதினொரு பிரதேச செயலகங்களில் பணியாற்றும் சமுர்த்தி வங்கிச் சங்க உத்தியோகத்தர்களுக்கான - மூன்றாம் கட்டப் பயிற்சிநெறி, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் 9 ஆம் திகதிவரை யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தினமும் காலை 8 மணிக்கு இந்தப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகும்.

சமுர்த்தி வங்கி - அதிகார சபையின் வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவினரால், நடத்தப்படும் இந்தப் பயிற்சிநெறியில், 72 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், ஏழு சமுர்த்தி முகாமையாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி, நேற்றுமுதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இன்று காலை 8.30 மணிக்கு அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணியும், பி.ப. 1 மணிக்கு யாழ். ஸ்ரார் விளையாட்டுக்கழக - பி அணியை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக்கழக - ஏ அணியும் மோதவுள்ளன.

### கலாசாலையில் சிலை திறப்பும், சஞ்சிகை வெளியீடும்!

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் - கல்வித்தாய் சிலை திறப்புவிழா, நாளை காலை 9 மணிக்கு, மாணவர் மன்றத் தலைவர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இதேவேளை- கலாசாலையால் வெளியிடப்படும், 'கலைமலர்' சஞ்சிகை வெளியீட்டுவிழா நாளை மு.ப. 11.30 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பேராசிரியர் வ. ஆறுமுகம் கலந்துகொள்வார்.

# 'நிக்கொட்' மாதிரிக் கிராமம் கிளிநொச்சியில் அமையும்!

(ஆழியவளை)

'நிக்கொரட்' நிறுவனத்தினரால் அமைக்கப்படவுள்ள முதலாவது மாதிரிக் கிராமம், கிளிநொச்சி பாரதிபுரத்தில் அமையவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட 'நிக்கொட்' நிறுவன பிரதித் திட்டப்பணிப்பாளர் கே.பார்த்திபன் தெரிவித்துள்ளார்.

மேற்படி கிராமம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

'நிக்கொட்' நிறுவனத்தின் சமூக அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து, விரைவில் இம்மாதிரிக் கிராமத்தை அமைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(122)

# இளைஞரை மோதிய உழவு இயந்திரம் பொதுமக்களால் மடக்கிப் பிடிப்பு!

முத்திரைச் சந்திக்கு அருகாமையிலுள்ள வெயிலுகந்தப் பிள்ளையார் கோயில் பகுதியில், இளைஞர் ஒருவரை உழவு இயந்திரத்தால் மோதிவிட்டு, தப்பியோட முயன்ற சாரதியை - அப்பகுதி மக்கள் மடக்கிப்பிடித்து எச்சரிக்கை செய்தபின் விடுவித்தனர்.

கடந்த புதன்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்ற, மேற்படி சம்பவத்தில் - தொடர்புபட்ட சாதியை விசாரித்தபோது, அந்த உழ[illegible] இயந்திரம் சட்டவிரோதமாக ம[illegible] கடத்திச்சென்றது தெரியவந்தது[illegible]

மேற்படி விபத்தில், நாயன்ம[illegible]கட்டு இராஜேஸ்வரி வீதியில் வசி[illegible]க்கும் குமார் (வயது 35) என்ப[illegible] காயமடைந்து, யாழ்.போதனா வை[illegible]த்தியசாலையில் அனுமதிக்கப்ப[illegible]ட்டார்.

(5[illegible]


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்

பெயர் : நோ.அபிதா
முகவரி: நல்லாயன் வீதி, இளவாலை.



எட்டாவது அகவையில்



பெயர் : உ.லக்ஸ்மன்
முகவரி: நெடியகாடு, வல்வெட்டித்துறை.

[illegible]ல்லாண்டு [illegible]

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# தடகளத் தளம்பல்கள்

சர்வதேச தடகளப் போட்டிகள் - உலகின் பல்வேறு களங்களில், பல்வேறு சுவையான முடிவுகளுடன் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால், சாதனை வீரர்கள் ஒருவரையொருவர் மாறிமாறித் தோற்கடித்துக்கொண்டு இருப்பதுதான். ஐக்கிய அமெரிக்கத்



மொறிஸ் கிறீன் - 100 m படுத்தும்பாடு

தடகளப் போட்டிகளில் பேர்னாட் வில்லியம்ஸ் 100 m உலக சாதனை நேரத்தைத் தன்னகத்தே வைத்திருக்கும் ரிம் மொண்ட்கொமரியைத் தோற்கடித்துள்ளார்.

முதலாமவர் எடுத்துக்கொண்ட நேரம் 10.11 செக்கன், மொண்ட்கொமரி 10.15 செக்கன், ஜோண் டிரமண்ட் 10.18 செக்கன். இவர்கள் மூவரும் பாரிஸ் வேர்ல்ட் சாம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்துகொள்ளத் தகுதி பெற்றுள்ளார்கள். பாரிஸ் நகரில்தான் கடந்த செப்ரெம்பரில் மொண்ட்கொமரி 9.78 செக்கனில் 100 மீற்றரைக் கடந்து சாதனை படைத்தார். இம்முறை மொறிஸ் கிறீன் உலக சாம்பியன் என்ற ரீதியில் இயல்பாகவே பாரிஸ் தடகளப் போட்டிகளுக்குத் தகுதி பெறுகிறார். இதேவேளை மொறிஸ் கிறீன் 100 m மற்றும் 200 m ஓட்டங்களில், பாரிஸில் தங்கம் வெல்வதில் பெரும் நம்பிக்கையுடன் இருந்தார்.

ஆனால், துரதிர்ஷ்டமாக மொறிஸ் கிறீன் 200 m ஓட்டப் போட்டிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள இயலாதவாறு, உபாதையால் அந்நிகழ்வில் இருந்து விலகிக்கொண்டார். எனவே, பாரிஸ் வேர்ல்ட் சம்பியன்ஷிப் போட்டிகளிலும் 200 m ஓட்டத்தில் கலந்துகொள்ளமுடியாத நிலையை அடைந்துள்ளார். எனவே, 100 m போட்டியில் தனது தங்கப்பதக்க ஆசையை நிறைவேற்ற கிறீன் முயற்சிசெய்ய வேண்டியிருக்கும். அமெரிக்கத் தடகளப் போட்டிகளில் மொறிஸ் கிறீனின் இழப்பு டார்விஸ் பெட்டன் என்பவருக்குக் கிடைத்தது. இவர் எடுத்துக்கொண்ட நேரம் 20.15 செக்கன்கள்தான்.

தடகள உலகில் மிகவும் ஆர்வமாக அவதானிக்கப்பட வேண்டியவர், அமெரிக்க வீராங்கனைகளிலிருந்து உருவாகி வருகிறார். அவர், அலிசன் பீலிக்ஸ். இவர் 200 m ஓட்டத்தில் கெலிவைற், ரொரி எட்வட்ஸ் இருவருக்கும் பின்னாக மூன்றாவதாக வந்துள்ளார். ஆனால், இவரது வளர்ச்சி வேகம் கண்டு எல்லோரும் ஆச்சரியமடைகிறார்கள். இதனாலேயே இவரை **SPRINT SENSATION** என்று அமெரிக்கர்கள் அழைக்கிறார்கள். அடுத்த ஒலிம்பிக்கில் எந்தெந்தப் பிரபலங்களை இவர் கவிழ்க்கப்போகிறாரோ தெரியவில்லை. இவர் 17 வயது மட்டுமே நிறைந்தவர். முன்னதாக 200 m ஓட்டத்தை 22.11 செக்கன் என்னும் சாதனை நேரத்தில் அதிரடியாக ஓடி முடித்தவர். இது அமெரிக்காவில் நடந்துகொண்டிருக்கிறது. நிறையப் பேசிய பிரித்தானிய, 100 m ஓட்ட வீரர் டுவெய்ன் சேம்பர்ஸ் கிறீசில் நடைபெற்ற ஒரு தடகளப் போட்டியில், முன்னாள் இளநிலைச் சாம்பியன் நைஜீரிய வீரர் டேஜி அலியூவிடம் 100 m ஓட்டத்தில் மண் கௌவியுள்ளார். டேஜி எடுத்துக்கொண்ட நேரம் 10.00 செக்கன்கள், சேம்பர்ஸ் எடுத்துக்கொண்ட நேரம் 10.03 செக்கன்கள். சேம்பர்ஸ் இவ்வாரத்தில், இரண்டு தடவைகள் ஒஸ்லோவிலும், கிளாஸ்கோவிலும் மொண்ட்கொமரியைச் சந்திக்கப்போகிறார். தொடர்ந்தும் துணிவாகவே பேசுகின்றார். எனது எல்லா நகர்வுகளுமே பாரிஸ் வேர்ல்ட் சாம்பியன்ஷிப் போட்டிகளை நோக்கியே அமைந்துள்ளன. நான் சிறிது மெதுவாகவே ஓடியதை உணர்கின்றேன். ஆனால், பாரிஸில் அப்படியிராது என்கிறார் இந்தப் பிரித்தானிய வீரர்.

ஆனால், மொறிஸ் கிறீனின் தன்னம்பிக்கைதான் அதிரடியாக வருகின்றது. அவர் கூறுகின்றார். நான் இன்னும் எனது உச்சவேகத்தைக் காட்டவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் அதனைக் காட்டுவேன். அது 9.6 செக்கன்களின் 100 m என்றிருக்கும். அத்துடன், ஓய்வுபெறுவேன் என்பவர் தொடர்ந்து




எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் பாரிஸ் நகரைவிட்டு நான் நீங்கும்போது, நான்காவது தடவையாக 100 மீற்றரில் தங்கப்பதக்கம் பெற்றவன் என்ற நிலையிலேயே நீங்குவேன் என்கின்றார்.

அடுத்தமாதம் தன் மகப்பேற்றை எதிர்நோக்கியிருப்பவர் 100 m ஒலிம்பிக் வீராங்கனை மரியன் ஜோண்ஸ். எனவே, இவர் பாரிஸ் செல்லப்போவதில்லை. எனவே, அமெரிக்கத் தடகளப் போட்டிகளில், இவரது பெயர் இயல்பாகவே இல்லை. இங்கு 100 m இல் பங்குகொண்டு வெற்றிபெற்ற வீராங்கனை கெல்லிவைற். இவர் தனது முன்னைய சாதனை நேரமான 10.95 இலிருந்து 10.93 ஆக நேரத்தைக் குறைத்து, 100 m இல் முதலிடம் பெற்றுள்ளார்.

ரொரி எட்வட்ஸ் மற்றும் முப்பத்தாறு வயதான கெய்ஸ் டெவர்ஸ் - இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக்



மொண்ட்கொமரி

கொண்டனர். கெய்வ் டெவர்ஸ் இரண்டு முறை 100 m ஓட்டத்தில் ஒலிம்பிக் தங்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

- ஜோஸப் கிருஷ்ணா

# செரினா ஓ செரினா



உலகத்தின் பார்வை செரினாவின் பக்கம்

கடந்தவாரம் பாரிஸ் ஓப்பன் டெனிஸ் போட்டிகளில் அரை இறுதிப் போட்டியில் பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்ரின் ஹெனினிடம் தோல்விகண்டபோது, இந்த நிமிடத்தின் டெனிஸ் ஆட்டத்தின் சக்கரவர்த்தினி கண்ணீர்விட்டு அழுதார். ஆனால், இவ்வாரம் விம்பிள்டன் டெனிஸில் அதுவொரு சிறுகணமென்று மறந்து, அடுத்தடுத்த கட்டத்துக்குப் போகிறார். இவர் செரினா வில்லியம்ஸ் என்று அறிமுகப்படுத்தித்தான், இவர் பற்றி எழுதவேண்டும் என்பதல்ல.

ப்ரெஞ்ச் ஓப்பனில் செரினா கண்ட தோல்வியானது, ஒரு வருடத்தில் இவர் விளையாடிய முப்பத்தொன்பது ஆட்டங்களில் மூன்றாவது மட்டுமே. கடந்த ஜனவரியில் அவுஸ்திரேலிய ஓப்பன் டெனிஸ் கிண்ணத்தை வென்றபோது., நான்கு மிகப் பிரபல்யமான **GRAND SLAM** பட்டங்களையும் வென்றவர் என்ற பெருமையை, இவர் பெற்றுக்கொண்டார். அந்த நான்கு முறையும் இவர் தோற்கடித்தது சகோதரி வீனஸ் வில்லியத்தை. இவர் இத்தகைய தகுதியும், திறமையும் பெற்றவர்கள் வரிசையில், ஐந்தாவது நபராவார்.

இதற்கு முன்னதாக இத்தகைய சாதனையைத் தம்மகத்தே கொண்டவர்கள் மொரின் கொனலி - மார்கிரட் கோர்ட் - மாட்டினா நவரட்லிலோவா - ஸ்ரெபி கிறாப் ஆகியவர்கள் மட்டுமே. 2002 ஆம் ஆண்டில் விளையாடிய அறுபத்தொரு ஆட்டங்களில் ஐந்தைத்தவிர, மற்றைய அனைத்திலும் வெற்றி கண்டவர் செரினா.

இருந்தாலும், டெனிஸ் விமர்சகர்கள் செரினாவை நன்கு அவதானித்து வருபவர்களாகவே உள்ளனர். இவரது ப்ரெஞ்ச் ஒப்பன் தோல்வியானது பெரிய அதிர்ச்சியுடனேயே எல்லோராலும் நோக்கப்பட்டது என்பது உண்மை. பிரான்ஸிலிருந்து, அமெரிக்கா சென்று, பின்பு தாயகத்திலிருந்து, தற்போது இங்கிலாந்தில் விம்பிள்டன் போட்டிகளில் ஆடிக்கொண்டிருக்கிறார் செரினா. இந்த இடைவெளியில் இவரது விளையாட்டின் உச்சத் திறமையானது, சிறிது தளர்ந்திருக்கிறது என்பதை அவதானிக்க முடிகின்றது என்கிறார்கள் விமர்சகர்கள்.

இன்னொருபுறம் செரினாவுக்கு ப்ரெஞ்ச் ரசிகர்கள் பெரும் வரவேற்புக் கொடுக்கவில்லை. அவரது ஆட்டத்தின்போது, செரினா எதிர்பார்த்திராத அளவிற்கு அவருக்கு எதிராகக் கூச்சலிட்டுள்ளார்கள். இதுபற்றி அமெரிக்காவில் பத்திரிகையாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்துக் கொண்டிருந்தபோதே, இரண்டுமுறை கண்கலங்கி இருக்கிறார். இது எல்லாத் தரப்பிலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது ப்ரெஞ்ச் ரசிகர்களின் நடத்தை ஏன் இப்படி ஒரு முதல்தர உலக வீராங்கனையை அவமானப்படுத்த முனைந்தார்கள் என்பது புரியாததாகவே இருக்கிறது.

இன்னொருபுறம், செரினாவையும் சிலவேளைகளில் புரிந்துகொள்ள முடியாததாக இருக்கின்றது என்பதும் உண்மை. இவரது அலங்கார முறைகள், உடைகள் போன்றவை சிலவேளைகளில் அதிருப்தியை ஏற்படுத்தினாலும், அவரிடம் உலகின் **NO-ONE** என்கிற பட்டத்தைத் தக்கவைக்கும் திறமை இருக்கிறது. அதனை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

செரினா தற்போது டெனிஸ் விளையாட்டைவிட, வேறு சில துறைகளிலும் கவனம் செலுத்துவதுபோலத் தெரிகின்றது. நடிப்புத்துறைப் பயிற்சிகள், உடையலங்காரத் துறையில் பயிற்சிகள் பெறுதல் போன்ற துறைகள் - இவரது டெனிஸ் ஆர்வத்தில் சிறிதாவது பாதிப்பை ஏற்படுத்தி இருக்கலாம் என்கிறார்கள் விமர்சகர்கள்.

என்னதான் இருந்தாலும், விளையாட்டு ரசிகர்கள் செரினாவை நேசிப்பது, அவரது விளையாட்டுத் திறமைக்காக ஆகும். அதனை இன்னும் நீண்டகாலம் தக்கவைத்துக் கொள்ளும் ஆற்றல் அவரிடம் உண்டு.

எனவே, தற்போதுள்ள நிலையில் செரினாவின் சாதனைகள் தொடரவேண்டும். விம்பிள்டன் டெனிஸ் போட்டிகளின் இறுதிமுடிவு செரினாவுக்குச் சாதகமாக இருக்கும் வகையில், ஒவ்வொரு கட்டத்திலும் தன்னைத் தயார்செய்து கொள்ளவேண்டும் என்றே டெனிஸ் ரசிகர்கள் விரும்புகிறார்கள்.

- சரண்யன்

# இதயத்தில் வலிக்கிறது

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளும் நாடுகள், உலகின் அதியுயர்ந்த உதைபந்தாட்டத்தரம் கொண்டனவாகவே அமையும். அந்த வகையில், ஆபிரிக்காக் கண்டத்திலிருந்து தெரிவாகும் ஐந்து நாடுகளில், கமரூன் என்றுமே தனக்கென ஒரு இடத்தைத் தக்கவைத்துக்கொள்ளும். இன்று கமரூன் நாடு மிகுந்த சோகத்தில் மூழ்கியுள்ளது. காரணம் - கமரூன் வீரர் மார்க் விவியன்வோ, பிரான்ஸில் நடைபெறும் கொண் பெடரேஷன் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின்போது, மைதானத்தில் தனது உயிரை நீத்துள்ளமையே.

பலம்வாய்ந்த நாடுகளைத் தோற்கடித்து, அரை இறுதிப் போட்டியில் கொலம்பியா நாட்டைச் சந்தித்தபோதே, இந்தத் துயரச் சம்பவம் நடைபெற்றுள்ளது. கொலம்பியாவை 1-0 என்று கமரூன் தோற்கடித்து, இறுதிப்போட்டியில் பிரான்ஸைச் சந்திக்கப்போகின்றது. ஆனால், அங்கு மார்க் விவியன் இருக்கப்போவதில்லை.

மைதானத்தில் மயங்கிவீழ்ந்த மார்க், பின்னர் சுயநினைவு பெறவேயில்லை. அவரது இறுதிமூச்சு மைதானத்திலேயே விடைபெற்றிருக்க வேண்டும். கமரூன் அணியின், உலகக்கிண்ண அணியில் ஒரு அங்கத்தவர் இவர். அதுமட்டுமன்றி இங்கிலாந்தின் உதைபந்தாட்டக் கழகங்களையும் பிரதிநிதித்துவபடுத்தியவர். இவர் ஒரு முதல்தர **MID FIELDER.** சர்வதேச உதைபந்தாட்டத்துறைக்கு 1993 இல் வந்த இவர், கமரூனின் உதைபந்தாட்டப் பெருமைகளில் எல்லாம் பங்களிப்புச் செய்தவர். இருபத்தெட்டு வயதான இவரின் இத்தகைய மரணத்தை யாராலும் சகித்துக்கொள்ள இயலவில்லை. திருமணமான இவருக்கு மூன்று குழந்தைகள் இருக்கிறார்கள். 2000 ஆம் ஆண்டில் ஆபிரிக்காக் கண்ட உதைபந்தாட்டச் சாம்பியன்களாக கமரூன் வந்தபோது, அந்த அணியில் இவரும் ஒரு அங்கத்தவர். உதைபந்தாட்ட உலகம் ஒரு உன்னதமான வீரனை இழந்துவிட்டது. இந்தவேளையில் இந்த வீரனுக்கு, 'நமது ஈழநாடு' விளையாட்டரங்கு அஞ்சலி செலுத்துகின்றது.



மார்க் விவியன்வோ

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# தனிநபர் சாதனைக்கு மட்டும்


லாரா

பந்து வீச்சாளருக்குச் சாதகமற்ற ஆடுகளத்தில் துடுப்பாட்ட வீரர்கள் குறைசொல்லாதபடி ஓட்டங்கள் குவிக்க, அதோடு மழையும் சேர்ந்துகொள்ள சென். லூசியாவில் நடைபெற்ற இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி - சோர்வு நிறைந்த, முடிவற்ற ஆட்டமாக முடிவடைந்துவிட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி குறைவேதும் இல்லாமல், மொத்தம் 354 ஓட்டங்களைக் குவித்துக்கொண்டாலும் - மேற்கிந்திய அணியை, ஒரு அழுத்தத்துக்கு உள்ளாக்கும் எண்ணிக்கைக்குள் ஆட்டமிழக்கச் செய்யும் என்பதில் யாருக்கும் நம்பிக்கை இருக்கவில்லை. அதேபோல இடையில் பொழியத் தொடங்கிய மழைக்கு ஒதுங்கி ஒதுங்கி, மேற்கிந்திய அணி குவித்துக்கொண்ட ஓட்டங்கள் 477. இதுவும் ஒன்பது விக்கெட் இழப்பிற்கு மட்டுமே.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி - விக்கெட் இழப்பின்றி 126 ஓட்டங்கள் பெற அதில் சனத் 72, அத்தப்பத்து 50 என்று அரைச்சதங்களைச் சேர்த்துக்கொண்டார்கள். இந்த டெஸ்ட் ஆட்டத்தில் குறிப்பிடத்தக்கது தனிநபர் சாதனைகள் தவிர வேறெதுவும் இல்லை. முதல் இன்னிங்ஸில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மாவன் அத்தபத்து, அருமையான சதம் (118) போட்டார். சங்கக்கார, அரைச்சதம் (56) போட்டார். கொலிமோர், 66 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைச் சரித்தார். பதினேழு வயதுப் பையன் டெய்லர் இரண்டு இன்னிங்ஸிலும் ஒரு விக்கெட்டையும் பெறஇயலவில்லை.

மறுபுறம் மேற்கிந்திய அணி சார்பில் வேவல் ஹைண்ட்ஸ், 113 ஓட்டங்களுக்கு ரன் அவுட் ஆகினார். லாரா, அற்புதமான இரட்டைச்சதம் (207) போட்டார். ஒமாரி பாங்க்ஸ் 50 ரன்கள் பெற்றார். முரளிதரன், 10 ஓவர்கள் போட்டு 138 ஓட்டங்களுக்கு, 5 விக்கெட்டுக்கள் சரித்தார். இது இவருக்கு 38 ஆவது முறை. லாராவின் விக்கெட்டைக் கைப்பற்ற முரளியால் முடியவில்லை என்றாலும், முரளியின் பந்து வீச்சில் லாரா தடுமாறியதை, தானே ஒப்புக்கொண்டது பெருந்தன்மை. அரவிந்த, அர்ஜுன இருவருக்கும் அடுத்து டெஸ்டில், 5000 ரன் எல்லையைத் தொட்டவராக சனத் மாறினார். எனினும், இந்த வீரனுக்கு லாராவின் ஓட்டம் பெறும் வேகம்தான், அவர் தம் இரட்டைச்சதத்தைவிடக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டது என்பது சிறப்பு. லாரா, இரட்டைச்சதம் அடிப்பது இது ஐந்தாவது தடவை. பொதுவாக இரண்டு அணிகளும் குறைசொல்ல முடியாத பந்துவீச்சாளர்களைக் கொண்டிருந்ததும், சிறந்த துடுப்பாட்ட வீரர்களைக் கொண்டிருப்பதும் துலாம்பரமாகத் தெரிகின்றது. அடுத்த டெஸ்ட் ஜமெய்க்காத் தீவில் நடைபெற இருக்கிறது. சென்.லூசியா டெஸ்டில் இழக்கப்பட்ட மணித்தியாலங்கள், ஒதுக்கப்பட்ட முப்பது மணித்தியாலங்களில் பத்து மணித்தியாலங்கள். ஜமெய்க்காவிலாவது வர்ண பகவான் ஒதுங்கிக்கொண்டு டெஸ்ட் ஆட்டம் நடைபெற அனுமதிக்கட்டும்.


ஹைரண்ட்ஸ் - அதிரடி செஞ்சரி

**- மக்டலின் மரியா.**

# சபிக்காதே வாழவிடு

பாகிஸ்தான் கிரிக்கெட் வரலாற்றின் சாபக்கேடே இதுதான். ஒருவரையொருவர் கழுத்தறுத்தல், கொச்சைப்படுத்தல், அவமதித்தல். இதோ இன்னொரு உதாரணம் - வக்கார் யூனுஸ், திடீரென்று சோஹெய்ப் அக்தார் மீது பாய்ந்துள்ளார். அக்தார் இரண்டாவது ஒரு நாள் போட்டியில் நன்றாகப் பந்து வீசவில்லை. அவரது ஒன்பது ஓவர்களில், இரண்டு விக்கெட் மட்டும் எடுத்து, 69 ஓட்டங்கள் கொடுத்துவிட்டார். இது திருப்தியானதல்லத்தான். இதனை வைத்துக்கொண்டுதான் வக்கார் கருத்துக் கூறுகிறார் - "அக்தார் வருடத்துக்கொரு முறைதான் ஏதாவது செய்வார். ஆனால், நான் அதைச் செய்வேன், இதைச் செய்வேன் என்று பீற்றிக்கொள்வார். இந்த லட்சணத்தில் தன்னை மக்ராவுடன் ஒப்பிட்டுக்கொள்ளவும் இவருக்குத் துணிவுள்ளதே" என்று சாடுகிறார். அதுமட்டுமன்றி இவர், "தான் அவுஸ்திரேலியாவில் பிறந்திருந்தால், நிறைய விக்கெட் வீழ்த்தியிருப்பேன்" என்றும் தன்னைப் பற்றி புழுகுகிறார். அவர் அப்படிப் பிறந்திருந்தால், பாகிஸ்தானுக்கு எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும் என்கிறார் மேலும் நக்கலாக. ஆனால்- பாகிஸ்தான் பயிற்றுநர் மியன்டாட் இதனை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.

மூன்றாவது ஒருநாள் போட்டியில், பத்து ஓவர்களில் இவர் கொடுத்தது நாற்பது ஓட்டங்கள் மட்டுமே. இதனையும் சுட்டிக்காட்டும் மியன்டாட், "தற்போது நல்லதொரு அணி வீரராக அக்தார் விளங்குகின்றார். மேலும் இளம் வீரர்களுக்கு நல்ல ஆலோசனைகளும் வழங்குகிறார். மேலும் இரண்டாவது ஆட்டத்தில் - நன்றாகப் பந்து வீசவில்லை என்பதைத் தானே உணர்ந்து, ஒன்றரை மணித்தியாலங்கள் பந்து வீச்சுப் பயிற்சியை மேற்கொண்டார். மூன்றாவது ஒரு நாள் போட்டியில் - அக்தாரின் பந்துவீச்சில் டிரெய்ஸ்கொதிக் இரண்டு முறையும், மைக்கல் வோண் ஒரு முறையும் தவறவிடப்பட்டனர்" என்றும், மியன்டாட் விலாவாரியாக எடுத்துக் கூறி அக்தாரை நியாயப்படுத்துகிறார்.


அக்தார்
திருந்தினாக்கூட திட்டுறாங்களே

இவர்கள் இருவரில் மியன்டாட் ஏற்றுக்கொள்ளத் தக்கவராக இருக்கின்றார். வக்கார் காழ்ப்புணர்ச்சி கொண்டவராகத்தான் தெரிகின்றார். வக்கார் அணியில், தான் இல்லாத கோபத்தை இப்படிக் காட்டுவதாகத்தான் கொள்ளவேண்டியிருக்கிறது. அணியில் இல்லாத போதே, இப்படிக் குறைகாண்பவர் அணித்தலைவராக இருந்தபோது, வீரர்களை எப்படி நடாத்தியிருப்பார் என்பதையும் ஊகித்துக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

பாகிஸ்தான் அணி தற்போது - வக்கார் அணித்தலைவராக இருந்தபோதைவிட நன்றாகத்தான் இருக்கிறது, செயற்படுகிறது. இதனைத் தட்டிக்கொடுத்து வளர்த்துவிட வேண்டியதுதான், பாகிஸ்தானின் கிரிக்கெட் சம்பந்தப்பட்டவர்களின் தலையாய கடமையாக இருக்கவேண்டும்.

உண்மையில், அக்தாரின் பந்துவீச்சிலுள்ள குறைநிறைகளைச் சுட்டிக்காட்டி, தளம்பல்களை நீக்கும் வழிவகைகளையும் வேகப்பந்துவீச்சாளர் என்ற வகையில், வக்கார் சுட்டிக்காட்டிக் கூறியிருந்தால், பாராட்டுக்குரியவராக இருந்திருப்பார். அதைவிடுத்து இன்னொருவரைக் கொச்சைப்படுத்தியதன்மூலம், வக்கார் யூனுஸ் தன்னைத்தானே கொச்சைப்படுத்திக்கொண்டார் என்றுதான் கொள்ளவேண்டும். இப்படியானவர்களில் உண்மையாக இதுவரை பாதிக்கப்பட்டது பாகிஸ்தான் கிரிக்கெட்தான்.

**- ரோஜா**

# முன்னேற இடமுண்டு



மைக்கல் வோன்
ஒரு மாதிரி சமாளித்தாயிற்று

இருதரப்புமே பல மாற்றங்களுடன் சந்தித்தன. உலகக்கிண்ணப் போட்டிகளில் இருதரப்புமே மண் கவ்விய அணிகள். இதுவே இரண்டு அணிகளின் கட்டமைப்புகளிலும் மாற்றங்களுக்குக் காரணமாக அமைந்தது. அதுவும் இங்கிலாந்து உலகக் கிண்ணக் கேப்ரவுண் போட்டியில் பாகிஸ்தானுக்கு விளைவித்த, நாசம் மாறாத வடுவாக பாகிஸ்தானின் மனதில் இருக்கிறது. இதனால்தான் வீடுபுகுந்து, தாக்கி வெல்வோம் என்று மார்தட்டுகின்றார்கள் பாகிஸ்தான் அணியினர். அவர்களின் நம்பிக்கை மிகைப்படுத்தப்பட்டதல்ல என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில், அடியோடு சரித்து, புதிய கட்டுமானத்தை இவ்வளவு பலமாக எழுப்பும் துணிவு - பாகிஸ்தான் நிர்வாகிகள் தவிர, வேறு யாருக்கும் வராது. அதோடு பயிற்றுநர் ஜவாட் மியன்டாட், இவர் களத்தில் நல்ல பெயர் பெற்றவரல்ல. ஆனால், கிரிக்கெட் ஆட்டத்தில் ஒரு சக்கரவர்த்தி. இவரையே ஒவ்வொரு வீரனும் ஒரு ஆதர்சமாகக் கொள்ளவேண்டும் என்கிறார், பாகிஸ்தான் அணித் தலைவர் ரஷீட் லத்தீப்.

இதேவேளை, இங்கிலாந்தின் ஒருநாள் தலைமையில் இருந்து, நஸார் உசேன் அகற்றப்படுவார் என்பது தெரிந்திருந்தாலும், அடுத்த ஒருநாள் அணித் தலைவர் யார் என்பது மூடுமந்திரமாக இருந்து - எல்லோரும் எதிர்பார்த்த டிரெய்ஸ் கொதிக்கின் ஆளுமையையும் மீறி, மைக்கேல் வோன் அணித் தலைவராகியது ஆச்சரியம் என்றாலும், தலைவரில் குறை ஏதுமில்லை. ஆனால், இங்கிலாந்துக்கு ஒரு அண்மைக்கால சாபம். காயங்கள், உபாதைகள். இதேவேளை, அணியின் இன்னொரு இழப்பு நஸார் இன்மை. நிக் நைட், அன்ரூ கடிக் போன்றவர்கள் ஓய்வு பெற்றமை. ஆனால், உண்மையான இழப்பு மிக அண்மையில் பிரித்தானிய மகாராணியரால் **OBE** எனும் உயர் விருது வழங்கப்பட்ட 40 வயதான அலெக் ஸ்ருவட் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஒதுங்கிக்கொண்டது தான். இவருக்குப் பதிலாக விக்கெட் கீப்பர் பதவியை ஏற்கப்போகிறவர் நொட் டிங்கம்ஷயர் கவுண்ரியைச் சேர்ந்த கிறிஸ் றீட்.



இதேவேளை முழுமையும் - இளமையில் மூழ்கக்கூடிய நிலையில் இங்கிலாந்து இல்லை. இதனால்தான், முப்பத்திரண்டு வயதான டரன்கோ மீண்டும் அணிக்குள் அழைக்கப்பட்டுள்ளார். அதோடு அவரே பந்துவீச்சாளருக்குள் முதன்மையானவராகவும் இருப்பார்.

இதேவேளை இளம் வீரர் அன்டர்சன் பாகிஸ்தானுக்கு உவப்பாக இருக்கப்போவதில்லை என்றெல்லாம் பலதரப்புக் கணிப்பீடுகளின் மத்தியில் 2-1 என்றவாறு **ODI** தொடர், இங்கிலாந்துக்குச் சாதகமாக முடிவடைந்திருக்கிறது. முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் பெற்ற வெற்றியை மகத்தானது என்று கூறிவிட முடியாது. இங்கிலாந்தை 204 ரன்களுக்கு மடக்கிய பாகிஸ்தான் - 8 விக்கெட் இழந்து, 49.2 ஓவர்களிலேயே வெற்றி இலக்கைக் கைப்பற்ற முடிந்திருக்கிறது. இதில் மொஹமட் ஹாபீஸின் 69ஐ விட்டால், குறிப்பாகச் சொல்ல வேறொன்றும் இல்லை.

ஆனால், அடுத்து வந்த இரண்டு போட்டிகளிலும் இங்கிலாந்து வென்றுவிட்டது. இதில் ஒன்றில் பாகிஸ்தான் சகல விக்கெட்டும் இழந்து பெற்றது 185. இதனைத் தாண்ட இங்கிலாந்துக்குத் தேவைப்பட்டது 22 ஓவர்கள் மட்டும். அதில் டிரெய்ஸ் கொதிக்கின் பங்கு 86. இதேபோன்றே மூன்றாவது ஆட்டமும் இங்கிலாந்துக்கு வெற்றி. பாகிஸ்தான் 50 ஓவர்களில் 229 பெற, இங்கிலாந்து 48.3 ஓவர்களில் 231 எடுத்து வெற்றிகண்டது.

டிரெய்ஸ் கொதிக் ஆட்டமிழக்காமல் 108 பெற்றார். எனவே, இந்தத் தொடரை நோக்கின் இங்கிலாந்து கூடுதலாகச் சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம். அன்டர்சனின் அபூர்வப்பந்து வீச்சு மற்றும் டிரெய்ஸ் கொதிக்கின் அபார ரன் குவிப்பு, நல்லதொரு நம்பிக்கையை இங்கிலாந்துக்குக் கொடுத்திருக்கும். இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோணுக்கு நல்லதொரு ஆரம்பம்.

**-செந்தூரம்**

# ஆரம்பம் மட்டுமே

இதுவரையில் எந்தவித அதிர்ச்சியும் பெரிதாக இல்லை. எதிர்பார்த்தபடியே விம்பிள்டன் டெனிஸ் ஆட்டங்கள் போய்க் கொண்டிருக்கின்றன. ஆண்கள் ஒற்றையரில் அன்ரீ அகாஷி, 1992 இல் விம்பிள்டனில் பெற்ற பட்டத்தை மீண்டும் பெற முன்னணியில் ஓடிக்கொண்டிருக்கிறார். இரண்டாவது சுற்றில் ஜேர்மனியின் லார்ஸ் வேர்க்ஸ் முல்லரை இலகுவாகவே தோற்கடித்துவிட்டார். அடுத்தகட்டத்தில் அகாஷி சந்திக்கப்போவது மொறொக்கோவின் யூனுஸ் அவ் அயனாவை. இவரைப் பற்றி அகாஷி உரிய மரியாதையுடனேயே கருத்துக் கூறுகின்றார். என்றாலும் விம்பிள்டன், புற்தரையில் அகாஷி இவரை வீழ்த்துவார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

அகாஷி இன்னமும் களத்தில் நிற்கும் ஒரு மூத்த வீரர். அதோடு மைதான நடைமுறைகளில், மிகுந்த கண்ணியத்தைக் கடைப்பிடிப்பவர். முப்பத்துமூன்று வயதான இவர் படிப்படியாக முன்னேறி முதலிடம் பெறுவார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. இன்னொரு கவனத்திற்குரியவர் ஸ்பானியாவின் ஜுவான் கார்லோஸ் பெரெய்ரோ - இவர் தற்போதுதான் ப்ரெஞ்ச் ஒப்பன் பட்டம் பெற்றவர். இவரும் தனது எதிரணிகளைச் சரித்து மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இவரும் முதன்நிலைக்கு மும்முரமாகப் போட்டியிடுவார் என்பது நிச்சயம்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் குறிப்பிடத்தக்க பிரபலங்கள் போட்டி போட்டுக்கொண்டு ஆடிக்கொண்டிருக்கிறார்கள். செரினா வில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ், மேரி பியர்ஸ் பரெஞ்ச் ஒப்பன் வென்ற ஜஸ்ரின் ஹெனின், ஜெனிபர் கபரியாட்டி என்று வரிசை நீண்டுகொண்டே செல்கின்றது. இவர்களில் அடுத்தடுத்த கட்டங்களில் யார் யார் மிஞ்சப் போகிறார்கள் என்பது ஊகிக்க முடியாததொன்று. எனினும், ப்ரெஞ்ச் ஒப்பன் இழப்பை எப்பாடுபட்டாவது செரினா, விம்பிள்டனில் நிவர்த்திசெய்துகொள்ள முழுமுயற்சி செய்வார் என்பதில் சந்தேகமில்லை.

**- அஞ்சலி.**


அகாஷி - என்றும் இளமை

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
வானநோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.
- திருக்குறள்.

## நமது நோக்கு

### பொங்கிய தமிழினம்!

யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வு- சர்வதேசத்துக்கும், அரசாங்கத்துக்கும் - தமிழ்மக்களின் சமாதானம் குறித்த நிலைப்பாட்டை, சமாதானத்தினூடான எதிர்பார்ப்பை மிக அழுத்தமாகச் சொல்லியிருக்கிறது.

இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் ஒன்றுதிரண்ட 'பொங்கு தமிழ்' நிகழ்வு - வரலாறு காணாத உணர்வெழுச்சி பொங்க நடந்திருக்கின்றது.

யாழ். குடாநாட்டில் - இராணுவப் பிரசன்னத்துக்குள், அது தரும் அழுத்தத்திற்குள் வாழும் மக்கள் - இந்தளவுக்குத் திரண்டதும், தங்கள் உணர்வலைகளைத் தெளிவாகவும், திடமாகவும் வெளிக்காட்டியதும் - 'பொங்கு தமிழ்' சொல்லாமல் சொல்லியிருக்கின்ற மிகப்பெரும் செய்தியாகவும் அமைகின்றது.

'பொங்கு தமிழ்' நிகழ்வைப் பதிவுசெய்ய வந்திருந்த, கொழும்பிலிருந்து வெளிவருகின்ற அரசசார்புப் பத்திரிகை யொன்றின் பிரதம ஆசிரியர்,

'யாழ். மக்கள் இந்தளவுக்குத் துணிவாகவும், துல்லியமா கவும் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவார்கள் என்று எண்ணியிருக்கவில்லை' என்றார்.

இதேபோன்று கருத்துவெளியிட்ட சிங்களப் பத்திரிகையா ளர் ஒருவர்,

'இராணுவத்தை - தமது மண்ணை ஆக்கிரமிக்க வந்த அந்நியப் படையாகக் கருதுகின்ற தமிழ்மக்கள், அதனைப் பகிரங்கமாக, இவ்வளவு தொகையாகத் திரண்டு வெளிப்படுத் தியிருப்பதன் பின்னர் - இராணுவம் தொடர்ந்தும் இங்கிருப் பதன் அர்த்தம் என்னவாகும்' எனக் கேள்வியெழுப்பியிருக் கிறார்.

இவ்வாறு மிக வலிதான, பரந்தளவிலான அதிர்வலைகளை உருவாக்கியிருக்கும் 'பொங்கு தமிழ்' - தமிழ்மண்ணில் அகலக் காலூன்றியிருக்கும் இராணுவப் பிரசன்னம், தமிழ்மக்களின் சுமுகவாழ்வுக்குத் தடையாக இருப்பதையும்,

தமிழ்மக்கள் தமது சொந்தமண்ணில் சுதந்திரமாக, அழுத் தங்களின்றி வாழவே விரும்புகின்றனர் என்பதையும் - உரத்துச் சொல்லியிருக்கிறது.

இது, தமிழ்மக்களிடமிருந்து - நேரடியாக, வெளிப்படை யாகக் கிளர்ந்தெழுந்திருக்கும் உணர்வு என்ற ரீதியில், இந்த உணர்வின் மதிப்பும், இந்த உணர்விற்கு மதிப்பளிக்க வேண் டிய அவசியமும் - சம்பந்தப்பட்டோரைச் சென்றடைந்திருக்கின் றது.

தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள், சமாதானப் பேச்சுவார்த்தை மேசையில் இதுவரைகாலமும் பல தடவைகளும் எடுத்துச்சொன்ன, வலியுறுத்திவந்த - தமிழ் மக்களின் சுமுகவாழ்வுக்குத் தடையான விவகாரங்கள்,

இன்று இலட்சக்கணக்கில் திரண்ட மக்களால் உலகின் கண்முன் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

'பொங்கு தமிழில்' பங்கேற்ற மக்களின் உணர்வுப் பிரவாக மும், அவர்களிடமிருந்து எழுந்த ஆக்கிரமிப்புக்கு எதிரான மனோபாவமும் - சர்வதேசத்தையும், அரசாங்கத்தையும் இது தொடர்பில் நிறையவே சிந்திக்கவைக்கும் என்பது உறுதியானது.

இதற்குமேல் - யாழ். குடாநாட்டு மக்களைப் பாதுகாப் பதற்காகவே இராணுவம் தங்கியிருக்கின்றது என்று எவராவது கூறமுனைவாராயின் - அது, கடைந்தெடுத்த, அப்பட்டமான பொய்ப்பிரசாரமே என்பதைத் தமிழ்மக்கள் பொங்குதமிழால் அறிவித்திருக்கின்றனர்.

இனியும் - இராணுவம், மக்கள் குடிமனைகளை ஆக்கிரமித் துக்கொண்டு, உயர்பாதுகாப்பு வலயமென்று அவற்றைத் தக்கவைக்க முயற்சிப்பது - தமிழ்மக்களின் வெகுசன அபிப்பிராயத்திற்கு முற்றிலும் மாறானது, தமிழ்மக்களின் அடிப்படை உரிமையைச் சீரழிப்பது என்பதை, சர்வதேசத்தின் கவனத்திற்கு மிகத்தெளிவாகவே 'பொங்கு தமிழ்' சுட்டிக் காட்டியிருக்கிறது.

அதேவேளை - 'பொங்கு தமிழ்' நிகழ்வில் கூடிய மக்கள் வெளியிட்ட பிரகடனத்தின்படி, அதிகாரபலம் பொருந்திய இடைக்கால அரசாங்கமொன்றை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதன் மூலமே - போரினால் சிதைந்த தமிழர் பகுதிகள் மீளக்கட்டியெழுப்பப்படவும், தமிழினத்தின் கலை - கலாசார விழுமியங்களைப் பேணுவதற்கும், வளர்ப்பதற்கும் வழிவகுக் கும் என்பதைத் தமிழினம் - தனது ஒருமித்த கோரிக்கையாக அரசிடமும், சர்வதேசத்திடமும் முன்வைத்திருக்கின்றது.

அமைதி முயற்சிகளும், சமாதானப் பேச்சுகளும் ஆரம் பமாகிய பின்னர் - மிகப்பெரும்பெருபெடுப்பில், தமிழினம் ஒன்று திரண்டு முன்வைத்திருக்கும் இந்தக் கோரிக்கையை செயற் படுத்தவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடமும், அவ்வாறு செயற் பட அரசாங்கத்தை வலியுறுத்தவேண்டிய கடமை சர்வதேசத் திடமும் தமிழ்மக்களால் கையளிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பொறுப்பும், கடமையும் நிறைவேற்றப்படுமிடத்து மாத்திரமே- அது, தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கான நியாயபூர்வமான பதிலாக அமையமுடியும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, 'பொங்கு தமிழ்' கொண்டிருக் கின்ற அரசியல் பரிமாணமும் மிகவும் முக்கியத்துவமுடைய தாகின்றது.

விடுதலைப் புலிகளே தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள், அவர் களுடனான பேச்சின்மூலமே சமாதானத்தை எட்டமுடியுமென வலியுறுத்திய அன்றைய 'பொங்கு தமிழ்' -

இன்று - இன்னமும் பலமடங்கு பலத்துடனும், தளராத பற்றுறுதியுடனும் தமிழ்மக்கள், விடுதலைப் புலிகளின் பின்னால் அணிதிரண்டு நிற்கின்றார்கள் என்பதை எதிரிகளுக்குக் கூறும் முரசறைந்திருக்கிறது.

'பொங்கு தமிழ்' நிகழ்வில் திரண்ட சனசமுத்திரம் - விடுதலைப் புலிகள் மீதும் அதன் தலைமை மீதும் - வெளிக்காட் டிய நம்பிக்கையும், விசுவாசமும், இவர்களே எம் காவலர்கள் என்று சொல்லிய அழுத்த உறுதிப்பாடும் -

இன்றைய சூழலில் - வார்த்தைகளால் வடித்துவிடமுடியாத மிகக்காத்திரமான செய்தியை, தமிழர் தாயகத்திலிருந்து வெளிக்காட்டியிருக்கிறது.

# மக்கள் மீள்குடியமரும் பகுதிகளில் மிதிவெடி அகற்றுவதில் முன்னுரிமை!

## யாழ். செயலக கூட்டத்தில் தீர்மானம்

யாழ்.குடாநாட்டில் மக்களை மீளக்குடியேற்றுவதற்குத் தடையாக இருக்கும் மிதிவெடிகளை, முன்னுரிமை அடிப்படை யில் அகற்றுவதற்கு, யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மிதி வெடிச் செயற்பாட்டு வழிகாட்டல் குழுவின் கூட்டத்தில் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

இதனால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கு வசதியாக மிதிவெடி அகற்றும் பணியைத் துரிதமாக்குவதற்குச் சகல மிதிவெடி அகற்றும் நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்படுவதென இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், யாழ்ப்பாணத்தில் அனைத்துப் பிரதேசங்களிலு முள்ள மிதிவெடிகளை அகற்றுவதில் பலத்த சிரமங்கள் இருப்பதாலும், ஆட்பற்றாக்குறை நிலவுவதாலும், துரிதகதியில் மிதிவெடிகளை அகற்றுவதில் சிக்கல்கள் எதிர்நோக்கப்படுகின் றன.

இதுவரை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மிதிவெடியுள்ள பிரதேசங்கள் ஐந்தைத் தெரிவுசெய்தே மிதி வெடி அகற்றும் பணி நடைபெற்றுவந்ததாகவும், இனி மக்கள் மீளக்குடியேறுகின்ற இடங்களை முன்னுரிமைப்படுத்தி மிதிவெடிகளை அகற்றுவதெனவும், இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை இராணுவ அரண்களை அண்டிய - மக்கள் மீள்குடியேறுகின்ற இடங்களில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடி களை அகற்றுவதிலுள்ள சிக்கல்கள் பற்றியும், கூட்டத்தில் கலந்துகொண்ட இராணுவ அதிகாரியுடன் கலந்துரையாடப் பட்டது.

இக்கூட்டத்தில் - அரச அதிபர், மேலதிக அரசாங்க அதி பர், திட்டப் பணிப்பாளர், பிரதேச செயலர்கள், மிதிவெடி அகற்றும் நிறுவனங்களின் அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவ னங்களின் பிரதிநிதிகள், இராணுவ தொடர்பு அதிகாரி, தொழில் நுட்ப ஆலோசகர் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.(ரா)

# போர்தான் ஓய்ந்துள்ளதே தவிர சமாதானம் ஏற்பட்டுவிடவில்லை

## 'பொங்கு தமிழ்' நிகழ்வில் கலாநிதி விக்கினேஸ்வரன்



அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்மூலம், நாட்டில் முழுமையான சமாதானம் ஏற்பட்டுவிடவில்லை. நாட்டில் நடைபெற்ற போர்தான் ஓய்ந்திருக்கின்றது.

- இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர், அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது -

நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டுமாயின், வடக்கு - கிழக் கிலுள்ள மக்கள் - தமது அடிப்படை உரிமைகளுடன் கூடிய இயல்புவாழ்க்கை வாழ்வதற்கான சூழல் ஏற்படவேண்டும்.

ஆனால், அந்தச் சூழல் இன்னமும் ஏற்படவில்லை. இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லவில்லை. இதனால், அவர்களது இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள் ளது. இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு, அவர் களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது அவசியம்.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பலமுறை சமாதானப்பேச்சுக்கள் நடைபெற்றன. இந்தச் சமாதானப் பேச்சுக்களில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட் டன. அந்தத் தீர்மானங்கள் ஒன்றும் நிறைவேற்றப்படவில்லை. இதனால், விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து சற்றுவிலகியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களில், முன்வைக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றவேண்டுமானால் இடைக்கால அரசு அமைக்கப்பட்டு, விடுதலைப் புலிகளிடம் வழங்கப்பட வேண்டும் என கலாநிதி விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

# படை வெளியேற்றத்துடன் இடைக்கால அரசும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அவசியமே!

## பல்கலை ஊழியர் சங்கத் தலைவர் கலாராஜ்



(யாழ்ப்பாணம்)

மக்களின் இயல்பு வாழ்க்கையை மீள ஏற்படுத்துவதற்கு இராணுவ வெளியேற்றம் எவ்வளவு அவசியமானதோ - நிதி, நிர்வாக அதிகாரவலுவுள்ள இடைக்கால அரசொன்றை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளின் பங்களிப்புடன் அமைப்பதும் அவ்வளவு முக்கியமானது.

- இவ்வாறு, யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் கலாராஜ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில் உரைநிகழ்த்தியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது,

போர்நிறுத்தமும், புரிந்துணர்வு உடன்பாடும் ஏற்பட்டுச் சமாதான செயற்பாட்டில் தமிழர்கள் பங்காளிகளாகி ஒன்றரை வருடங்களாகிவிட்டன. ஆனால், அதன் பெறுபேறுகளில் தமிழர்கள் இன்னமும் பயனாளிகளாகவில்லை. புரிந்துணர்வு உடன்பாட்டின் பகுதிகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வில்லை.

ஆறு சுற்றுப் பேச்சுக்கள் முடிவடைந்த நிலையில், அதன் பெறுபேறுகள் அமுலாக்கப்படவில்லை. புனர்வாழ்வு, புனரமைப் புக்கான உபகுழுவின் செயற்பாடுகள் சட்டவலுவின்றி முடக் கப்பட்டுள்ளன. பேச்சுக்களுக்கு முன்பே உறுதியளிக்கப்பட்ட இடைக்கால அரசு இதுவரை வழங்கப்படவில்லை.

மக்களுக்கு இயல்பு வாழ்க்கை ஏற்பட, மக்கள் தமது வாழ்விடங்களுக்கு மீளச்செல்ல வேண்டும். அவ்வாறு செல்வ தற்காகவே அங்கு ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினரைத் தமது வீடுகளுக்குச் செல்லுமாறு நாம் கோருகிறோம்.

ஒரு விடயத்திற்காக இராணுவத்தினருக்கு நன்றிகூற விரும்புகிறேன். 1995 இன் பின் யாழ்ப்பாணத்தில் அவர்களது செயல்களால் கோபமுற்ற மக்களின் உணர்ச்சி வெளிப்பாடா கவே 'பொங்கு தமிழ்' எழுந்தது. அரசியலில் ஆர்வமின்றி ஒதுங்கிநின்ற யாழ்ப்பாணத்தின் நடுத்தர மக்களையும் 'பொங்கு தமிழ்' அசைத்தது.

ரிவிரச இராணுவ நடவடிக்கையில் இராணுவம் ஏற்படுத்திய அரசியல் வெற்றிடத்திலிருந்து, எந்த அரசியற்கட்சியாலும் நெறிப்படுத்தப்படாமல் - இயல்பாக முகிழ்ந்த ஒரு மக்கள் எழுச்சி நிகழ்வாகவே, 'பொங்கு தமிழ்' பொங்கியது.

கடந்தகாலங்களில் எமக்கு இராணுவத்தினரால் இழைக் கப்பட்ட அநீதிகளை மறந்துவிடத் தயாராகவுள்ளோம். இராணு வத்தினரின் நலனின் மீதுள்ள அக்கறையின் பேரால் கேட்கின் றோம். தயவுசெய்து நீங்கள் எமது வாழ்விடங்களிலிருந்து அகன்றுசென்று, உங்கள் குடும்பத்துடன் இணைந்து கொள் ளுங்கள்.

இறுதியாக இன்று இங்கு பெருமளவில் கலந்துகொண் டுள்ள தென்னிலங்கைச் சிங்களச் சகோதரர்களுக்கு ஒரு வேண்டுகோள்விடுக்கிறேன். இன்று தென்னிலங்கையில் சிறி லங்காவை மீளப்பெறுவது பற்றி - அதிகம் பேசப்படுகிறது. நடைமுறையில் இந்த அழகியதீவு இரு தேசங்களாகப் பிரிந்துகிடக்கிறது. புலிகளால் மீளப்பெற வேண்டுமாயின் நாம் இன்று இங்கு வெளிப்படுத்தும் தமிழ்மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுங்கள். தமிழ்த்தேசியம், மரபுவழித்தாயகம், சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வுக்கு வழி செய்யுங் கள் என்றும், அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

# மிலேனியம் புலமைபரிசுக்கு 32 மாணவர்கள் தெரிவு!

## திருமலையில் நிகழ்வு இடம்பெறும்

(உடுவில்)

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்க ளுக்கு, இவ்வாண்டின் மிலேனியம் புலமைப்பரிசில் வழங்கும் வைபவம், எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி காலை 10 மணிக்கு திருகோணமலைக் கடற்படைத்தளத்தில் இடம்பெற வுள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 32 மாணவர்கள், இப்புலமைப் பரிசில் திட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக் கான ஒத்திகை நிகழ்ச்சி, பரிசளிப்பு நடைபெறும் தினத்திற்கு முதல்நாள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

# அரசாங்கத்தைக் குறிவைக்கும் சந்திரிகாவின் புதிய வியூகம்!

## தெற்குத் திசையினிலே...

### கொழும்பிலிருந்து இந்திரஜித்



**கொ**ழும்பு நகரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக, அரசாங்கம் முனைப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதன் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன், போர்நிறுத்த உடன்பாடு செய்துகொள்ளப்படுவதற்கு முன்னர் இருந்துவந்த அச்சநிலை மீண்டும் ஏற்பட்டுள்ளது.

சோதனைச்சாவடிகள், தேடுதல்கள், அடையாள அட்டைகள் கோரல் என்பன மீண்டும் தலையெடுத்துள்ளன. இதற்குமேலாகத் தமிழர்கள் தம்மை அடையாளம் காட்டமுடியாத ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளதாகவே கருதப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரானவர்கள் எனக்கூறப்பட்ட, தமிழ் இயக்கங்களின் முன்னாள் உறுப்பினர்கள் பலர் - படையினருடன் செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் படையினருக்குத் தகவல் கொடுப்பவர்களாகவும் செயற்பட்டு வருகின்றனர்.

இதனால், இவர்கள் கொல்லப்படுகின்றனர் என்ற காரணத்தை முன்வைத்து, அரசாங்கம் - கொழும்பு நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்த முடிவெடுத்துள்ளது.

படையினருக்குத் தகவல் கொடுப்பவர்கள் கொல்லப்பட்ட வேளையில், இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் முனைப்புப் பெறாதபோதும், தெஹிவளை பொலிஸ் நிலையப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி சுனில் தாப்ரு கொல்லப்பட்டதையடுத்தே- பாதுகாப்பு நகர்வுகள் தீவிரமடைந்துள்ளன.

"தமிழீழ விடுதலைப் புலிகள் சட்டவிரோதமாகக் கொழும்பில் தங்கியுள்ளனர். அவர்களைக் கைதுசெய்வதால் உண்மைத் தகவல்களைப் பெறமுடியாது. என்றாலும், அவ்வாறானவர்கள் தொடர்பான தகவல்களைப் பொலிஸ் நிலையங்களுக்குத் தெரிவிக்கவேண்டும்" - என, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இக்கருத்துத் தெரிவிக்கப்பட்டு இரண்டு வார காலப்பகுதிக்குள் - மாரப்பனவின் கருத்துக்களில் மாற்றங்கள் ஏற்பட்டன.

சட்டவிரோதமாகக் கொழும்பில் தங்கியுள்ள - தமிழீழ விடுதலைப் புலிகளைத் தேடிக் கைதுசெய்யும் நடவடிக்கைகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். தெஹிவளைப் பொலிஸ நிலையப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி சுனில் தாப்ருவின் கொலையை அடுத்தே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாரப்பனவின் உத்தரவின் பேரில், இதுவரை ஐந்துக்கும் மேற்பட்ட தேடுதல் நடவடிக்கைகள் கொழும்பில் நடத்தப்பட்டுள்ளன. இதில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கலாம் என்ற சந்தேகம் பொலிஸார் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

மறுபுறத்தில், பொலிஸ் தரப்பு மற்றுமொரு சவாலை எதிர்நோக்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. படையினர் மற்றும் பொலிஸாருக்குத தகவல் கொடுத்துவருபவர்கள் கொல்லப்பட்டுவருவதால், தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் - கொழும்பில் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாகப் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

படையினருக்குத் தகவல் வழங்கினால், தாம் கொல்லப்படுவோம் என்ற அச்சத்தில் அவர்கள் தகவல்களைத் தரத் தயங்குகின்றனர் அல்லது தம்மை அந்தப் பணிகளிலிருந்து விடுவித்துக்கொள்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில், சுனில் தாப்ருவின் கொலை- பாதுகாப்புப் பிரிவினரின் மத்தியில் மற்றுமொரு சந்தேகத்தையும் எழுப்பியுள்ளது.

தாம், இதுவரை தகவல் கொடுப்போராக நம்பிக்கொண்டிருக்கும் தமிழர்கள் - எந்தளவு நம்பிக்கைக்கு உரியவர்கள் என்ற சந்தேகமே அதுவாகும். சுனில் தாப்ருவைக் கொலை செய்தது, தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என்ற கருத்தே தற்சமயம்வரை பொலிஸாரால் கூறப்பட்டுவருகின்றது.

ஆனால், அவ்வாறான ஒருவர் பொலிஸாருக்கு எவ்வாறு தகவல் கொடுப்பவராகச் செயற்பட்டார் என்பது சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது. சுனில் தாப்ருவுக்குப் பதவியுயர்வுகள் கிடைப்பதற்கு - தகவல் கொடுப்பவராகச் செயற்பட்டதாகக் கூறப்படும் மதன்குமாரே காரணம் எனப் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது. அதாவது, மதன்குமார்- தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய போராளிகள் மற்றும் இலக்குகளை இனங்காட்டியமையால்தான், தாப்ருவினால் - குறிப்பிட்ட போராளிகளையும், இலக்குகளையும் கண்டுபிடித்து - பதவியுயர்வுகளைப் பெறமுடிந்தது எனக் கூறப்படுகிறது.



சுட்டுக் கொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரி சுனில் தாப்ருவின் சடலத்தைப் பார்வையிடும் உயர் பொலிஸ் அதிகாரிகள்.

இந்த நிலையில், மதன்குமார்- தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினரா? அல்லது பொலிஸாரினால் அவ்வாறான கதை ஒன்று புனையப்பட்டிருக்கிறதா? என்பவை கேள்விகளாகத் தொக்கிநிற்கின்றன.

இவற்றுக்கு விடைகாணும் பொறுப்பு - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் தற்சமயம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனினும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு - இதனை விசாரணை செய்து வெளிப்படுத்துவது என்பது, சிரமமான காரியமாகவே இருக்கப் போகின்றது.

படையினருக்குத் தகவல் கொடுப்பவர்கள் கொலை செய்யப்பட்ட வேளையில், இந்த விசாரணைப் பொறுப்புக்கள் - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் பாரப்படுத்தப்படவில்லை. ஏனெனில், அவை போர்நிறுத்த உடன்பாட்டிற்கு உள்ளடங்காத விடயங்கள் என, அரசாங்கம் வரையறுத்துக்கொண்டது.

ஆனால், புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதன் பின்னர் நிலைமை மாறியுள்ளது.

இதுதொடர்பில், விசாரணைகளை மேற்கொண்டுவரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் - பொலிஸ் தரப்புச் சாட்சியங்களைப் பதிவுசெய்துள்ளனர். ஆனால் மதன்குமார், தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினரா? என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள - அவர்களுக்கு வாய்ப்புக்கள் இல்லை.

எனவே, இதில் எவ்வாறான முடிவைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு எடுக்கப்போகின்றது என்பது, பொறுத்திருந்து பார்க்கவேண்டிய விடயமாகும்.

இந்த நிலையில், அரசாங்கம்- புலனாய்வுப் பிரிவினரின் கொலைகளுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது குற்றஞ்சுமத்தியுள்ளது. அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் - இந்த விடயம் தொடர்பாக நோர்வேயிடம் தெரிவிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

அதேநேரம், தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து- போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டிருப்பதாக, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்தவார இறுதியில் - அத்தனகல்லையிலுள்ள நிட்டம்புவவில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சம்மேளனக் கூட்டத்தில், ஜனாதிபதி ஆற்றிய உரை - அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தது.

ஜனாதிபதியின் பேச்சு வழமைபோலவே - ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தைச் சாடும்வகையில் அமைந்திருந்தது. தாம் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைக் கலைக்கப்போவதான எச்சரிக்கை, ஜனாதிபதியின் உரையில் தெரிந்தது.

ரணில் விக்கிரமசிங்க - தேசிய அரசாங்கம் ஒன்று தொடர்பில் தம்முடன் பேச முன்வந்தபோதும், அந்த மனிதருடன் இணைந்து, தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கப்போவதில்லை எனவும் ஜனாதிபதி கூறினார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தமிழீழத்தைப் பெற்றுக்கொடுக்கவே, ரணில் விக்கிரமசிங்க முயற்சி மேற்கொள்கிறார். அதற்குத் தாம் இடந்தரப்போவதில்லை என்று ஜனாதிபதி எச்சரித்தார்.

ஜனாதிபதியின் எச்சரிக்கை - கடந்த ஒன்றரை வருடகாலப்பகுதியில் பலதடவைகள் விடுக்கப்பட்டபோதும், அந்த எச்சரிக்கையின்படி செயற்பாடுகள் எவையும் நடந்ததாகத் தெரியவில்லை. ஆனால், ஜனாதிபதியின் தற்போதைய எச்சரிக்கை, புதிய நம்பிக்கையுடன் விடுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணியுடன், புதிய கூட்டு தேசிய முன்னணி ஒன்றை அமைப்பதில் முனைப்புக்காட்டி வருகிறது. இந்த முனைப்பில் தற்சமயம் திருப்புமுனை,- அதாவது இணக்கம் ஏற்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற - மக்கள் விடுதலை முன்னணியுடனான, கூட்டுத் தேசிய முன்னணி தொடர்பான இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தையில் பல விடயங்கள் பேசப்பட்டன. அவற்றில் இணக்கப்பாடு எட்டப்பட்டதாக இரு தரப்பினரும் தெரிவித்துள்ளனர்.

இந்தப் புதிய இணக்கம் குறித்த நம்பிக்கையின்மேல் நின்றுகொண்டே ஜனாதிபதி சந்திரிகா, பிரதமருக்கு எச்சரிக்கை விடுத்திருப்பதாகக் கருதப்படுகிறது.

மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணங்கிக்கொண்ட விடயங்களின் படி - இந்தச் சந்திப்பில், எதிர்வரும் அரசாங்கத்தில்- இரண்டு கட்சிகளுக்கும் ஒதுக்கப்படப்போகும் பதவிகள் மற்றும் ஆசன முறைமைகள் என்பன பேசப்பட்டுள்ளன. புதிய கூட்டு தேசிய முன்னணியைப் பதிவுசெய்வது தொடர்பில், ஏற்கனவே பிரசசினை நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டபோதும், இப்போது அதில் சட்டப் பிரச்சினைகள் இல்லையென்ற கருத்து வெளியிடப்பட்டுள்ளது.



சுதந்திரக் கட்சி மாநாட்டில் - அனுரா பண்டாரநாயக்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, அனுருத்த ரத்வத்த.

அதனடிப்படையில், இரண்டு கட்சிகளும் தமது தேர்தல் சின்னமாகத் தாமரை மலரைத் தெரிவுசெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறான உடன்பாடுகளின் மத்தியில் - மக்கள் விடுதலை முன்னணியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் எதிர்வரும் 8 ஆம் திகதி கண்டியில் அல்லது கொழும்பில் ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடவிருக்கின்றன. இதனையடுத்து, நாட்டில் பாரிய அரசியல் நகர்வுகளை நடத்தப்போவதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் பாரிய நகர்வுகள் என்ன என்பது நிச்சயப்படுத்தப்படாதபோதும், 8 ஆம் திகதிக்குப் பின்னர் உள்துறை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் தகவற்துறை அமைச்சு என்பவற்றைப் பொறுப்பேற்கப் போவதாக, அவருடன் நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

இதன்மூலம், மாற்று அரசாங்கம் ஒன்றை அமைப்பது என்பதைக் காட்டிலும், எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதற்கான வழியையே ஜனாதிபதி எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது. அதேவேளை, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க இன்னமும் வெளிநாட்டு உதவிகளில் நம்பிக்கை வைத்துக்கொண்டு, தமது அரசியற்செயற்பாடுகளை முன்கொண்டுசெல்கிறார்.

ரோக்கியோவில் கிடைத்த நிதியுதவிகளைக் கொண்டு - நாட்டில் அபிவிருத்திகளை மேற்கொண்டால், மீண்டும் பொதுத்தேர்தலில் வெற்றி பெறலாம் என அவர் கருதுகிறார்.

எனினும் - பிரதமரும், ஜனாதிபதியும் தமது தேர்தல் வெற்றிகளுக்கு- தமிழீழ விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்தவேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளார். இதனை முன்கொண்டே, தாம் ஆட்சிக்கு வந்தாலும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக ஜனாதிபதி கூறிவருகிறார்.

எது எப்படியிருப்பினும், தென்னிலங்கையில் - இன்னமும் ஸ்திரமற்ற அரசியற்சூழ்நிலை தொடர்கிறது. பிரதமரும், ஜனாதிபதியும் தமது அரசியல் பலத்தைக் காட்டும் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றனர். தமிழ்மக்களின் உணர்வுகளை மதிக்கவேண்டிய கட்டம் பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் தற்சமயம் ஏற்பட்டுள்ளது.

இதன் ஒருகட்ட நகர்வாகவே 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில்- பிரதமரின் இணைப்புச் செயலாளர் பங்குகொண்டமையாகும்.

தென்னிலங்கையின் அரசியல் நகர்வுகள் ஆட்சியைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்படும் அதேநேரம், மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தை குறித்துக் கலந்துரையாட, நோர்வே மற்றும் ஜப்பான் நாட்டவர்கள் - நாளை முதல் கொழும்புக்கு வரவிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. ❑

# உள்ளூராட்சி வார விழாவுக்காக நெடுந்தீவில் முன்னோடி ஏற்பாடுகள்!

(யாழ்ப்பாணம்)

அடுத்தமாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் உள்ளூராட்சி வாரவிழாவை, நெடுந்தீவில் வெகுசிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெறுகின்றன.

இதற்கான முன்னோடி நடவடிக்கைகளில் நெடுந்தீவு சனசமூக நிலையங்களின் சமாசமும், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், அரச அலுவலகங்கள், பாடசாலைகள், பொது ஸ்தாபனங்கள் என்பன ஈடுபட்டுவருகின்றன.

உள்ளூராட்சி வாரவிழா ஆரம்ப நிகழ்வாக - வீதிகள், பொது இடங்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

நெடுந்தீவுத் துறைமுகப் பகுதியில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மரம் நடுகைகளும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

மேலும் கடந்த 2000 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின் பிறந்த குழந்தைகளுக்கும், குழந்தைகளின் தாய்மாருக்கும் சத்துணவு, மருந்து வகைகள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் ஆரோக்கியமான குழந்தைத் தெரிவும் இடம்பெறவிருக்கின்றது.

மேலும் முதியோர்களுக்கான வேகநடைப் போட்டி, குதிரையோட்டப்போட்டி, பெண்களுக்கான சங்கீதக் கதிரைப் போட்டி, துவிச்சக்கர வண்டி மெல்லோட்டப்போட்டி, பாலருக்கான விளையாட்டுக்கள் என்பனவும், கலை கலாசார நிகழ்வுகளும், சிறந்த சனசமூக நிலையத் தெரிவும் இடம்பெறவுள்ளதுடன், சிறந்த சனசமூக நிலையங்களுக்குப் புத்தகங்களும் வழங்கப்படவிருப்பதாகவும், பிரதேசசபையின் செயலாளர் ச.பொ. தில்லைநாதன் தெரிவித்தார். (113)

# அமெரிக்கத் தலையீடு வேண்டி லைபீரிய மக்கள் கோரிக்கை!



எரியும் மொன்ரோவியா

லைபீரியத் தலைநகர் மொன்ரோவியாவில் கூடிய ஆயிரக்கணக்கான மக்கள், உள்நாட்டுப் போரைத் தணிப்பதற்கு - அமெரிக்கா தலையிடவேண்டும் எனக் கோரியுள்ளனர்.

மொன்ரோவியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்னால் மக்கள் கூடி, இந்த வேண்டுகோளை விடுத்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை - லைபீரிய ஜனாதிபதி, கடும் சண்டைக்குப் பின்னர்- நேற்று, மொன்ரோவியத் தெருக்களில் பலத்த பாதுகாப்புடன் பயணித்ததாகவும் கூறப்படுகிறது.

அமெரிக்கா, லைபீரியப் பிரச்சினையில் தலையிடுவதை, தான் வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க - மொன்ரோவியாவில், நேற்று மோதல்கள் தணிந்தபோதும் - 25 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வீடுகளுக்குச் செல்லாமல், வீதிகளிலேயே தம் வாழ்வைக் கழித்து வருகின்றனர்.

உலகவலம்

# ஜம்முவில் நடந்த சண்டையில் ஆறு இந்தியப் படையினர் பலி!

(காஷ்மீர்)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் நடந்த துப்பாக்கிச் சண்டையில், ஆறு இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர்.

காஷ்மீரின் குளிர்காலத் தலைநகரான ஜம்முவிலிருந்து ஆறு மைல்கள் தள்ளியிருக்கும் சுன்ஜ்வான் பகுதியிலுள்ள இராணுவ முகாமொன்றை, இஸ்லாமியப் பிரிவினைப் போராளிகள் தாக்கியதில் இந்த உயிரிழப்பு ஏற்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை எனக் கூறப்படுகின்றது. இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், காஷ்மீருக்கு மூன்று நாள் விஜயமாக வந்து சென்ற இறுதித்தினம் - இச்சம்பவம் நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இராணுவ முகாமின் சுவரைத் தாண்டிக் குதித்து வந்தவர்களே - முகாமிலுள்ள படையினரைத் தாக்கியதாகவும், சில மணி நேரங்களுக்கு இரு தரப்பிலிருந்தும் கடுமையான துப்பாக்கிச் சமர் நடைபெற்றதாகவும், இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# காணாமற்போன அமெரிக்கர் விவகாரத்தில் மூவர் கைது!

ஈராக் தலைநகர் பக்தாத்தில், இரண்டு அமெரிக்கப் படையினர் தமது வாகனத்துடன் காணாமற்போன சம்பவம் தொடர்பாக - மூன்று ஈராக்கியர்களை, அமெரிக்கப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை நடந்த இச்சம்பவம், அமெரிக்க - பிரிட்டிஷ் படையினரிடையே பதற்றத்தை உருவாக்கியுள்ளது.

இதேவேளை - தென் ஈராக்கினுள் ஹஜாவ் பகுதியில், கார்த் திருட்டு சம்பந்தமாக விசாரணை செய்யச்சென்ற அமெரிக்காவின் மிலிட்டரி பொலிஸார் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# ஹமாஸைத் தடை செய்யும் அமெரிக்க முடிவுக்கு எதிர்ப்பு!

## ஐரோப்பிய யூனியன் ஆட்சேபம் தெரிவித்தது

பலஸ்தீனப் போராளி அமைப்பான ஹமாஸை, முழுமையாகத் தடைசெய்யவேண்டுமென அமெரிக்கா எடுத்துவரும் முயற்சிகளைக் கண்டித்துள்ள ஐரோப்பிய யூனியன் - ஹமாஸின் அரசியல் நடவடிக்கைகள் அதனால் பாதிப்படையும் எனத் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய யூனியனின் சிரேஷ்ட பேச்சாளரான ரெஜ்கோ கெம்பினேன் இது தொடர்பாகக் கூறும்போது,

ஹமாஸ் முழுவதுமாகத் தடை செய்யப்பட்டால், அது வேண்டத்தகாத விளைவுகளை ஏற்படுத்திவிடுமென எச்சரித்தார்.

ஹமாஸ் அமைப்பு, ஐரோப்பிய நாடுகளில் நிதி திரட்டுவதில் ஈடுபடுவது அதிகரித்தமை பற்றி, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்த இரண்டு தினங்களில், ஐரோப்பிய யூனியனின் இக்கருத்து வெளியாகியிருக்கிறது.

ஐரோப்பிய யூனியன் நாடுகளில்- பிரான்ஸ், ஹமாஸைத் தடைசெய்வதற்கு கடுமையாக எதிர்ப்புத் தெரிவிக்கும் நாடாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் ஐரோப்பிய யூனியனுள்ள பிரிட்டன் மற்றும் சில நாடுகள், அமெரிக்காவின் போக்கை ஆதரித்தே வருகின்றன.

# பல்கலை ப்ரெஞ் திரை விழாவில் இன்று திரையிடப்படும் படங்கள்

**தன்னை கதாநாயகன் ஆக்கிக் கொண்டான்.**
**(UN HERO TRES DISCRET)**




இதுவரை யுத்தத்தில் பங்குபற்றியிராத ஒரு மனிதன், யுத்தத்தின் இறுதி மாதங்களில் தன்னையொரு கதாநாயகனாக நிலைநிறுத்த முடிவு செய்கிறான். அல்லது அவன் இப்போது வாழ்வதிலும் பார்க்கச் சிறப்பானதும், செழுமையானதும் போற்றும்படியானதுமான ஒரு வாழ்வைக் கண்டுபிடிப்பதற்காக, ஒரு கதாநாயகனாக உருமேற்கொள்கிறான். குழப்பம் நிறைந்த 1944/45 இல் பாரிஸுக்கு அந்நியமான குளிரில், அவன் மிக நுட்பமான பொய்யனாவதுடன் வாழ்வில் சிலவற்றை விலக்கியும், மறைத்தும் கொள்கிறான். அத்துடன், வெற்றிகரமாக எதிர்ப்பு இயக்கத்துள் நுழைந்த அவன், ஜேர்மனியில் - பிரான்ஸால் கைப்பற்றப்பட்ட பகுதியில் முக்கியமான ஒரு பதவியை ஏற்க அழைக்கப்படுகின்றான். உண்மையில் வேறொருவனான இவன், இதுவரையும் பெற்றிராத நிர்வாகம், நட்பு, அதிகாரம், காதல் எல்லாவற்றையுமே பெற்றுக் கொண்டான். ஆனால், எவ்வளவு நாட்களுக்கு? 1996 **Cannes** திரைப் படவிழாவில் விமர்சன ரீதியாகப் பாராட்டப்பட்ட இத்திரைப்படம், சிறந்த திரைக்கதைக்கான பரிசைப் பெற்றுக்கொண்டது.

**அவர்கள் நேற்றுப் பிறக்கவில்லை.**
**(LES VISITE)**

மத்தியகாலத்தில், வீரப் பெருந்தகைகளாகக் கொள்ளப்பட்ட **Knight**கள் துணிந்து சாதனைகள் ஆற்றிய காலத்தில் **Count Godefroy** என்பவரும், அவரது அடிமையான **Jacquouille** தற்செயலாக கி.பி. 12 ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றைய காலத்தினுள் புகுந்து விடுகின்றனர். அதனால் ஏற்படும் விளைவுகள் மிகவும் நகைச்சுவையானவை. கழிவறைகள், தொலைபேசிகள் ஆகியவற்றைக் கண்டு 12 ஆம் நூற்றாண்டு வீரர்கள், இவை யாதெனப் புரியாது திகைக்கின்றனர். தனது காலத்திற்குத் திரும்பிச் செல்ல அவர்கள் எத்தனிக்கிறார்கள். இவை **Knight** களுக்கு உடன்பாடானதா?

**கூனன் (LE BOSSU)**

1857 இல் எழுதப்பட்ட, தொல்சீர் பிரஞ்சு நாவலான கூனன் என்பதனை அடிப்படையாகக் கொண்ட இத்திரைப்படம் - உற்சாகமூட்டும் வாள் சண்டைகள், உள்ளத்தை உருக்கும் காதல், காவியப்பாங்கான வீரதீரங்கள் நிறைந்தது.

இத்திரைப்படம் - வாள்வீச்சு வீரர்கள் எனும் உயர் மரபு சார்ந்துவருவது. தனது நெருங்கிய நண்பராகிய **Nevers** என்பவரைக் கொடூரமாகக் கொன்ற, **Count Gonzague** என்பவரைப் பழிவாங்குவது எனச் சபதமெடுத்த, வாளவீச்சு வீரரான **Lagardere**, தனது கொல்லப்பட்ட நண்பனின் அநாதை மகளாகிய **Avrore**யை காத்து வளர்ப்பேன் என்றும் முடிவெடுக்கிறார். 16 வருடங்களின் பின் **Lagardere** மீண்டும் பாரிஸுக்குத் திரும்புகிறார்.

தனது நணபனைக் கொன்றவனை வஞ்சம் தீர்ப்பதற்காக, தனது எதிரியின் கூனல் விழுந்த வேலைக்காரனாகத் தன்னை உருமாற்றிக் கொண்டு அவர்களின் கூட்டத்தினுள் உளநுழைகிறார். தீய சக்தியான தனது எதிரியைக் கொல்ல அவர் தருணம் பார்த்திருக்கிறார்.



காடுகளில் பயிற்சிபெற்றுவரும் பிரேஸில் நாட்டு இராணுவ வீரர் ஒருவர் - 'அனகொண்டா' என்னும் மலைப்பாம்பைப் பிடித்து வைத்திருக்கிறார். அமேஸன் காட்டுப் பகுதியில் பதிவானது இக்காட்சி.

# காபூலுக்கு வெளியேயும் பிரிட்டிஷ் படையினர்!

ஆப்கானிஸ்தானில், தலைநகர் காபூலுக்கு வெளியே அமைதி காப்புப் பணியில் ஈடுபட, பிரிட்டன் மேலதிகப் படைகளை ஆப்கானுக்கு அனுப்பிவைத்துள்ளது.

காபூலுக்கு வெளியே பிரிட்டிஷ் படைகள், அமைதிப் படையாகப் பணிபுரியவிருப்பது இதுவே முதற் தடவையாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின்படி - அடுத்த வருடம் ஆப்கானிஸ்தானில் நடைபெறவிருக்கின்ற பொதுத்தேர்தலுக்கு முன்னர் - அமைதியை ஏற்படுத்தவதற்கு, இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - ஆப்கானுக்கென தனியான, புதிய இராணுவமொன்றை உருவாக்குவதில் அமெரிக்கர்கள் ஈடுபட்டிருப்பதும் தெரிந்ததே.

MILTON® MILTON
MAGIC
Insulated Glass Vacuum Bottle
யாழ். சந்தையில் மிக விரைவான விற்பனையில் உள்ளது
Magic Flask உத்தரவாதத்துடன் வழங்கப்படுகிறது.
ஏக விநியோகஸ்தர்:
THE PENINSULA GROUP
Importers Exporters & Distributors
127/10, Temple Road,
Jaffna.
Tel/ Fax: 021 222 3720
(சி-1128)




விழியின் மீது விழிப்பாயிருங்கள்
➤ சிறிய எழுத்துக்கள் எழுதப் படிக்க சிரமப்படுகிறீர்களா?
➤ ஒரு விதமான தலைவலியினால் அவதிப்படுகிறீர்களா?
அப்படியாயின் நிச்சயம் கண் குறைபாடுதான் காரணம்
(பாடசாலை மாணவருக்கு விசேட சலுகை உண்டு)
எம்மிடம் வாருங்கள்!
இலவச கண் பரிசோதனைகளும், ஆலோசனைகளும் வழங்கப்படும். அத்துடன்,
✪ முகப் பொலிவிற்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும், மிதப்புப் பற்களுக்குக் கிளிப்போட்டுக்கொள்ளவும்
இன்றே விஜயம் செய்து பாருங்கள்
எரிக் கணேஷ்
மூக்குக் கண்ணாடி அகமும் பல் கட்டும் இடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கிளைகள்: 80, K.K.S. வீதி, சுன்னாகம். 91, K.K.S.வீதி, கொக்குவில்.
T.P.222-2486
(சி-1130)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நயினாதீவு உற்சவம் இன்று ஆரம்பமாகிறது!

(நயினாதீவு)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

குடாநாட்டிலுள்ள பக்தர்கள் சிரமமின்றி, இவ்வுற்சவத்தில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அடுத்தமாதம் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த உற்சவம் தொடர்பான விசேட கூட்டமொன்று கடந்தவாரம் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

திருவிழாக் காலங்களில் உரிமம் பெற்ற படகுகளை மட்டுமே சேவையில் ஈடுபட அனுமதிப்பது என்றும்,

சப்பறம், தேர், தீர்த்தம் ஆகிய விசேடதினங்களில் பக்தர்களுடைய போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைப்பதற்காக, வேறு இடங்களைச் சேர்ந்த உரிமம் பெற்ற படகுகளையும் - சேவையில் ஈடுபடுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

படகுகளில் பொருட்கள் ஏற்றுவோர், மாலை 4 மணிக்குப் பின்பே பொருட்களை ஏற்ற அனுமதிக்கப்படும் என்றும், திருவிழாவின் இறுதி மூன்று தினங்களில் - ஆலயத் திருவிழாவுக்கான பொருட்களை மட்டுமே ஏற்றுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

படகுச்சேவை - அடுத்தமாதம் 10 ஆம் திகதிவரை இரவு 7 மணி வரையும், அதன்பின்னர் இரவு - பகல் சேவையாகவும் நடத்தப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்படகுச்சேவைகள் அரை மணித்தியாலத்திற்கு ஒருதடவை நடைபெறவிருக்கின்றன.

# லண்டனில் ஜே.வி.பியின் தலைவருடன் சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்கள் பேச்சு!

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரமுகர்களுக்கும் - மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவுக்குமிடையில் முக்கிய பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

லண்டனில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது - சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் அமைச்சர்களான - மங்கள சமரவீர, நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரே ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவைச் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது - ரணில் அரசாங்கத்தின் அமைதி முயற்சிகள் தொடர்பாகவும், எதிர்வரும் தேர்தலில் ஜே.வி.பியுடன் இணைந்து போட்டியிடுவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாக, சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# 16 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட்; அரையிறுதி ஆட்டங்கள் இன்று!

யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடாத்திய - 16 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான கிரிக்கெட் போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் - யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி, புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்திலும் -

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் - யாழ். இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி, யாழ்.இந்து மைதானத்திலும் மோதவுள்ளன.

இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி - புதன், வியாழன் ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளதாக, யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கச் செயலாளர் எ.சகாயராஜா தெரிவித்துள்ளார். (58)

## போர் நிறுத்த...

அவர்களை இம்சைப்படுத்தல், சிறுவர்களைக் கடத்துதல் போன்ற விடயங்களைத் தடுத்து நிறுத்துவதற்கும்,

பாடசாலைக் கட்டடங்களை, ஆயுதம் தாங்கியவர்கள் பயன்படுத்துவதைத் தடுப்பது மற்றும் வீதிக் காவல் நிலைகளில் மக்கள் துன்புறுத்தப்படுவதைத் தடுத்து நிறுத்தக் கூடியதுமான சரத்துக்களையும் போர்நிறுத்த உடன்பாட்டில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்றும் யுனிசெப்பினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க...

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும், சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் சில செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருந்தன.

எனினும், தற்போது அவை உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. இச்செயற்திட்டங்கள் மீண்டும் எப்போது நடைமுறைப்படுத்தப்படும் என்பது பற்றிய தகவல் எதையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. (க)

## துப்பாக்கிகள் சகிதம் வேட்டையாடுவதற்கு புலிகள் பகுதிக்குள் நுழைந்தவர்கள் தடுத்துவைக்கப்பட்டபின் விடுதலை

(கொழும்பு)

கடந்த பத்து நாட்களாக மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 15 வயது சிங்கள மாணவன் ஒருவர் உட்பட இரண்டு எல்லைக் கிராமவாசிகளை விடுதலைப் புலிகள் நேற்றுமாலை விடுதலை செய்தனர்.

பொலநறுவ மாவட்டம் - வெலிக்கந்தை வாசிகளான இவர்கள் - கடந்த 19 ஆம் திகதி மட்டக்களப்பு எல்லைப்புறக் காட்டுப் பிரதேசத்தில் வைத்து, துப்பாக்கிகளுடன் விடுதலைப் புலிகளிடம் பிடிபட்டனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஆயுதங்களுடன் நடமாடி, மிருகங்களை வேட்டையாடினார்கள் என்ற குற்றத்துக்காக - கடந்த 10 நாட்களாக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

## அமெரிக்கா செல்...

இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு வருடாந்தம் 200 கோடி டொலர் பெறுமதியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

## கொழும்பில் பாரிய சுற்றிவளைப்பு ...

அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் அனைவரும் தனித்தனியாக தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளுக்காக 39 பேர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட, ஏனையோரை நேற்று நண்பகலளவில் பொலிஸார் விடுவித்தனர்.

அதிகாலைப் பொழுதில் நடைபெற்ற இப்பாரிய தேடுதல் நடவடிக்கை காரணமாக, அப்பகுதிகளில் பெரும் பதற்றம் உருவாகியது. அத்துடன் - அப்பகுதியூடான வீதிப் போக்குவரத்துக்களும் தாமதமடைந்தன.

இதேவேளை - கொழும்பு நகரில் அண்மையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களையடுத்து, பாதுகாப்புப் பணிக்காக ஐநூறு படையினர் அழைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அழைக்கப்பட்டுள்ள இப்படையினர் - கொழும்பு நகரில் சட்டம், ஒழுங்கைப்பேணும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும்,

இவர்கள், 24 மணிநேரமும் வாகனங்களில் ரோந்து நடவடிக்கையை மேற்கொள்வர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பாதாள உலகத்தவர்கள் மற்றும் குற்றவாளிகளைப் பிடிக்கவே, படையினர் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், பிரிட்டனில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் விசேட உத்தரவின்பேரிலேயே, இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் படைத தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

## சோஷின் கப்பலிலிருந்த போராளிகளின்...

கண்காணிப்புக்குழுவுக்குத் தெரியவில்லை. இவர்கள், இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டிருப்பார்கள் என்பதற்கான ஆதாரமெதனையும் கண்காணிப்புக்குழு கண்டுபிடிக்கவில்லை.

★ ஐ.நாவின் கடற்சட்டம் பற்றிய 1982 டிசம்பர் 10 ஆம் திகதி பிரகடனத்துக்கமைய, விடுதலைப் புலிகளின் எண்ணெய்த் தாங்கிக் கப்பலைச் சோதனையிட இலங்கைக் கடற்படைக்கு உரிமையுள்ளது. இதனால், கடற்படை போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாக கண்காணிப்புக்குழு கருதவில்லை.

★ ஐ.நாவின் 1982 டிசம்பர் 10 ஆம் திகதிய, கடற்சட்டம் பற்றிய பிரகடனப்படி - விடுதலைப் புலிகளின் கப்பல், பார்வையில் இனங்காணக் கூடியதாக, உரிய உத்தியோகபூர்வமான கொடியைப் பறக்கவிடவில்லை.

- எனக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தின் அடிப்படையிலான பிரேரிப்பாக -

இதுபோன்ற சம்பவங்கள் நடக்கும்போது - கடற்படைக் கப்பல்களில் இலத்திரனியல் முறைப்படி பதியப்படும் தகவல்கள், கண்காணிப்புக்குழு சோதனையிடமுன் அழிக்கப்படக்கூடாதெனவும், அவை பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டிருக்கிறது.

மோதல் மூளக்கூடிய சாத்தியங்கள் தென்படின், அதுபற்றி கடற்படையும், விடுதலைப் புலிகளும் உடனடியாகக் கண்காணிப்புக்குழுவுக்குத் தெரியப்படுத்தவேண்டுமெனவும்,

ஐ.நா பிரகடத்தைப் பின்பற்றுமாறு, விடுதலைப் புலிகள் - தமது வர்த்தகக் கப்பல்களின் மாலுமிகளுக்குக் கூறவேண்டுமெனவும்,

கண்காணிப்புக்குழு மேலும் சில பிரேரணைகளைக் குறிப்பிட்டிருக்கிறது.

இதேவேளை - கண்காணிப்புக் குழுவின் அறிக்கையில், விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் துணைத் தளபதி லெப்.கேணல் செழியனின் நேர்காணலும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

இந்த நேர்காணலின்படி -

சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் எண்ணெய்த் தாங்கிக் கப்பல் சென்றுகொண்டிருந்தபோதே, கடற்படை இடைமறித்தது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கப்பலைச் சோதனையிட அனுமதி வழங்கப்பட்ட நிலையில் - கப்பலிலிருந்த மாலுமிகளில் கப்டனைத் தவிர அனைவரும் கடலில் குதித்து- கடற்படை கோரியதன் பேரில் - கடற்படைக் கப்பலை நோக்கிச் சென்றதாகவும்,

பின்னர் - சற்றுநேரம் கழித்து கப்பல் தாக்கப்பட்டு, தீப்பிடிக்கத் தொடங்கியதும் - தானும் கடலில் குதித்து, கடற்படைக் கப்பலைச் சென்றடையவிருப்பதாக, ரேடியோ செய்திமூலம் கப்டன் தெரிவித்ததாகவும் - லெப்.கேணல் செழியன் தெரிவித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தாப்ரூவைச் சுட்டுவிட்டு...

மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்தவர். இவர், சுனில் தாப்ரூவுடன் இணைந்து கொழும்பில் பலரைக் காட்டிக்கொடுத்து, அதன்மூலம் கிடைக்கும் பணத்தில் அங்கு வாழ்ந்துவந்தார்.

சுனில் தாப்ரூவுக்கும் மதன்குமாருக்குமிடையில் பணக் கொடுக்கல் வாங்கல்களில் கருத்து வேற்றுமை இருந்ததாகவும், சம்பவம் இடம்பெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் அறியமுடிகிறது.

மதன்குமாரின் சகோதரரான ரமேஸ்குமார் என்பவர், புளொட் மோகனுடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் கடமைபுரிவதாகவும் சில தகவல்கள் கிடைத்துள்ளன.

சுனில் தாப்ரூ, ஏற்கனவே மட்டக்களப்பிலும் சில வருடங்கள் கடமையாற்றியதாகவும் அப்போது மதன்குமார், ரமேஸ்குமார் ஆகிய சகோதரர்களுடன் சுனில் தாப்ரூ தொடர்புகளை வைத்திருந்ததாகவும் கூறப்படுகின்றது.

சம்பவதினம்-சுனில் தாப்ரூவைச் சுட்டுவிட்டு மதன்குமார் உடனே ஓடிச் செல்லாமல் நின்றபோது, பொலிஸார் அவரை, ஒரு ஓட்டோவில் ஏற்றிக்கொண்டு சென்று இன்னொரு வாகனத்தில் பின் தொடர்ந்துபோய் விடியோப்படம் பிடித்ததாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

மதன்குமாரிடம் 'சயனைட்' குப்பி இருக்கவில்லையெனவும், வேண்டுமென்றே திட்டமிட்டு 'சயனைட்' குப்பியை மதன்குமாரிடம் திணித்து விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினராக மதன்குமாரைச் சித்திரிப்பதாகவும் 'தமிழ் அலை' தெரிவித்துள்ளது.







இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.